பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 05 புதன்கிழமை (19-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் : 46

# இனப்பிரச்சினை நிலைமையை ஆராய பிரிட்டிஷ் அதிகாரி கொழும்பு வந்தார்

## யுத்தப் பாதிப்பு குறித்தும் விவரம் சேகரிப்பார்

கொழும்பு,ஜனவரி19

**இனப்பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் உள்ள தாமதம், தடங்கல் நிலைமை, அரசின் செயற்பாடுகள் என்பன குறித்துக் கண்டறிந்துகொள்வதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்புக்கு வந்துள்ளார்.**

**இலங்கையின் இன்றைய அரசியல் நிலை குறித்து ஆராய்வதோடு, யுத்தத்தினால் உண்டான நாட்டின் பொருளாதாரப் பாதிப்புக்கள் குறித்தும் அவர் விவரங்களைச் சேகரித்து தமது அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார் என்று தெரியவந்துள்ளது.**

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியத் திணைக்களத்தின் உதவித் தலைவரான இயன் லின்ஸேயே உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்புக்கு வருகைதந்துள்ளார். இவர் இலங்கையின் அரசியல் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள்குறித்து ஆராய்ந்து வருகிறார்.

நேற்று முன்தினம் இரவு தமிழ் கட்சிப் பிரதிநிதிகளுடனும், ஐ.தே.க. பிரதிநிதிகளுடனும் தனித்தனியாக இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அவர் ஆராய்ந்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் மீது வேட்டு; பெண் பலி; மூவர் காயம்!

### மியாங்குளத்தில் நேற்று சம்பவம்

மட்டக்களப்பு,ஜன.19

கல்முனையில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றின் மீது நேற்று முற்பகல் 11 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் பலியானார். மூன்று பயணிகள் காயமடைந்து பொலநறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடிக்கும் புனானைக்கும் இடையில் 6ஆம் கட்டையில் உள்ள மியாங்குளம் என்னும் இடத்தில் வைத்தே பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

வழமையாக இராணுவ வாகனத் தொடரணிக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக வீதியின் இருமருங்கிலும் இராணுவத்தினர் மறைந்திருப்பது வழக்கமாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்துக்கு மேலும் 15 ஆயிரம் பேர்!

### அடுத்தமாதம் நேர்முகப் பரீட்சை

கொழும்பு,ஜன.19

இராணுவத்துக்கு மேலும் 15 ஆயிரம் பேரைத் திரட்டுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. யுத்தத்தில் படையினருக்கு ஏற்பட்டுவரும் இழப்புக்களைத் தொடர்ந்து இராணுவத்துக்குப் புதிதாக 15 ஆயிரம் பேர் சேர்க்கப்பட வேண்டுமெனப் பாதுகாப்பு அமைச்சு முடிவுசெய்திருப்பதாகவும் - அதனைத் தொடர்ந்து வடக்குத் தவிர்ந்த இலங்கையின் சகல பாகங்களிலும் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு நடைபெற உள்ளதாகவும்- தெரியவந்துள்ளது.

இராணுவத்துக்குப் புதியவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் அநேகமாக அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறும். இந்தளவு பெரிய எண்ணிக்கையில் இராணுவத்திற்குப் புதியவர்களைச் சேர்க்க இருப்பது போரைத் தீவிரமாக்குவதன்பொருட்டே என அவதானிகள் கருதுகின்றனர். (ஐ-8)

## 35 செய்தியாளர்கள் இன்று வருகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.19

தெற்கில் இருந்து பல்வேறு செய்திநிறுவனங்களையும் சேர்ந்த 35 செய்தியாளர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இருதினங்கள் இங்கு தங்கியிருக்கும் அவர்கள் குடாநாட்டின் பல இடங்களுக்கும் செல்லவுள்ளனர்.

மக்களின் வாழ்க்கை நிலையையும் குடாநாட்டில் நடைபெறும் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் குறித்தும் இவர்கள் நேரில் விவரங்களைச் சேகரிப்பர்.

இங்கு இடம்பெறவுள்ள அரச மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் இரண்டு நிகழ்வுகளிலும் இவர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3)

## பொலீஸ் விடுதி முன்பாக சக்திமிக்க குண்டு மீட்பு!

கொழும்பு,ஜன.19

கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியில் உள்ள சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளின் விடுதிக்கு முன்பாக - 250 கிராம் எடை கொண்ட - சக்தி வாய்ந்த குண்டு ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

பிரதமரின் அலுவலகம் முன்பாக இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஜெயந்த ஜெயசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாகவே இந்தக் குண்டு மீட்கப்பட்டது.

பின்னர் அந்தக் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஜெயசிங்கவைக் கொலைசெய்யும் நோக்குடன் இந்தக் குண்டு வைக்கப்பட்டிருக்கக்கலாம் எனப் பொலீஸார் நம்புகின்றனர்.(ஐ-க-3-7)

### ஜனாதிபதிக்கு வந்த வெடிகுண்டுக் கடிதம்:

## மத்திய தபாலக ஊழியர் இருவர் விசாரணையில்!

குண்டு பொருத்தப்பட்ட கடிதப் பொதி ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்ட சம்பவம் தொடர்பாக மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தைச் சேர்ந்த தபால் ஊழியர்கள் இருவர் பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

குண்டு வைக்கப்பட்டிருந்த கடிதத்தை இவர்கள் இருவருமே நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்துக்கு விநியோகித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக தபால் திணைக்களத்தினரும் பொலீஸாரும் தனித்தனியே விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-7)

## களுவாஞ்சிக்குடி சந்தையில் கூடியிருந்த மக்கள் மீது சூடு!

### ஐவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதி

மட்டக்களப்பு,ஜன.19

களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தையில் பொருள்களை வாங்கிக்கொண்டிருந்த பொதுமக்களில் ஐவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

களுவாஞ்சிக்குடி பொலீஸாரும் சந்தையில் பொருள்களை வாங்கிக்கொண்டிருந்தபோது தயார்நிலையில் வைத்திருந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கியிலிருந்தே இந்த வேட்டுக்கள் பாய்ந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர். தற்செயலாகவே துப்பாக்கி இயங்கியதால் இந்த அனர்த்தம் நேர்ந்ததாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பத்திற்கு மேற்பட்ட வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. காயமடைந்த ஒரு பெண்ணுக்கு மூன்று சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. தற்செயலாக துப்பாக்கி இயங்கும் சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சன்னங்கள் வெளியேறுவது அரிதாகும்.

எம்.பத்மாவதி (வயது30-கோட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பற்றைக்குள் பெண்ணின் ஆடைகள்

புத்தூர் மேற்கு சோமஸ்கந்தாக் கல்லூரி வீதியில் - சிவன் கோவிலுக்கு அருகே - பற்றைகள் அடர்ந்த பகுதியில் பெண் ஒருவரின் ஆடைகள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 15ஆம் திகதி முதல் அவை அங்கு காணப்படுவதாகவும்-

அவசரமாகக் கழற்றி எறியப்பட்டவை போன்ற நிலையில் ஆடைகள் மற்றும் உள்ளாடைகள் அனைத்தும் கிடப்பதாகவும் கூறப்படுகிறது.

முதல் நாள் இரவு - ஊரடங்கு நேரத்தில் - அப்பகுதியில் வாகன இரைச்சல்கள் கேட்டதாகவும் நாய்கள் குரைத்ததாகவும் அப்பகுதி வாசிகள் கூறியுள்ளனர். (ஐ-180)

## கொழும்பில் நேற்று மறியல்

அரசாங்க அபிவிருத்திப் பணிகளைச் சீர்குலைக்கும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரி தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கொழும்பு லிப்டன் சதுக்கம் முன்பாக நேற்று மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் குழுவின் தலைவரும் அமைச்சருமான அலவி மௌலானா தலைமையில் நடந்த இந்த மறியலில் நூற்றுக்கணக்கான தொழிற்சங்கப்பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஐ-க-3)

## உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 16ஆம் திகதி தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் தேன்மொழி (தனபாலன் துஷ்யந்தி - யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-க-3)

## ஈ.பி.டி.பி ஜெகன், தவராசா எம்.பிக்களாகப் பதவியேற்பு!

கொழும்பு,ஜன.19

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் வேலும்மயிலும் குகேந்திரன் (ஜெகன்), கட்சியின் ஆலோசகர் சின்னத்துரை தவராசா ஆகியோர் நேற்றுப் பதவி ஏற்றுக்கொண்டனர். சபாநாயகர் கே.பி.ரத்நாயக்க முன்னிலையில் இடம்பெற்ற பதவியேற்பை அடுத்து இவர்கள் சபை நடவடிக்கைகளில் பங்குபற்றினர்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் சுயேச்சைக் குழு சார்பாக எம்.பிக்களாக இருந்த எம்.சந்திரகுமார், ஏ.தங்கவேலு ஆகியோர் கடந்த மாதம் 16ஆம் திகதி அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரையும் கட்சியில் இருந்து வெளியேற்றுவதற்கான கடிதத்தை சுயேச்சைக் குழு அவர்களது கொழும்பு முகவரிகளுக்கு அனுப்பியிருந்தது.

இந்த வெளியேற்றத்துக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வதற்கு அவர்களுக்கு ஒரு மாதகால அவகாசம் இருந்த போதும் - அவர்கள் வழக்குத்தாக்கல் செய்யாத காரணத்தால் புதியவர்கள் இருவரை நியமிக்க தேர்தல் திணைக்களம் அனுமதி வழங்கியது. அதனைத் தொடர்ந்து ஜெகன், தவராசா ஆகியோர் நேற்று பதவிப்பிரமாணம் செய்துள்ளனர். சந்திரகுமார், தங்கவேலு ஆகியோர் தற்சமயம் வெளிநாட்டில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-க-3)

## தொண்டாவின் இடத்துக்கு புத்திரசிகாமணி நியமிப்பு!

கொழும்பு,ஜன.19

இ.தொ.கா.தலைவர்எஸ்.தொண்டமானின் மறைவை அடுத்து ஏற்பட்டுள்ள எம்.பி பதவி வெற்றிடத்துக்கு சில நிபந்தனைகளின் அடிப்படையில் மாகாணசபை உறுப்பினர் புத்திரசிகாமணியை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முடிவு செய்தது.

தொண்டமானும் ஐ.தே.கவின் மற்றொரு தேசியப்பட்டியல் எம்.பியான திருமதி அமரா பட்ரா திஸநாயக்காவும் அண்மையில் காலமாகியதை அடுத்து ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் எம்.பி.பதவிகளில் இரு வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த இடங்களுக்குப் பொருத்தமானோரை நியமிக்கும் அதிகாரத்தை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் நிறைவேற்றுக் குழு வழங்கி இருந்தது.

தொண்டாவின் இடத்திற்கு ஜனநாயக தேசிய தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் எம்.எஸ்.செல்லச்சாமி நியமிக்கப்படலாம் என முன்னர் கட்சி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

இது விடயத்தில் செல்லச்சாமிக்கும் புத்திரசிகாமணிக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, ரணில் விக்கிரமசிங்க நேற்று இருவரையும் சந்தித்துப் பேசிய பின்னர், தொண்டாவின் இடத்துக்கு புத்திரசி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## இடமாற்றம்

மூன்று தசாப்தங்களாக யாழ். நகரில் மதுபான விற்பனையில்/ விநியோகத்தில் முன்னோடிகளான

# வாமாஸ்
# மதுபான களஞ்சியம்

19 - 01 - 2000 இல் இருந்து கீழ்க்காணும் முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**56/7, 56/8 ஸ்ரான்லி வீதி,**
தொ.பேசி 2989 **யாழ்ப்பாணம்.**

(யாழ். அஞ்சல் அலுவலகத்திற்கு முன்பாக)

(72815)


## போயா கருத்தரங்கு

பொருள்: **'இல்லறமும் இலக்கியமும்'**
கருத்துரை வழங்குபவர்: திரு. செம்பியன் செல்வன்
(தமிழ் எழுத்தாளர் ஒன்றியத் தலைவர்)
நாள்: 20-01-2000 வியாழக்கிழமை
நேரம்: பிற்பகல் 3. 30 மணி (இ. நே)
இடம்: ''அகவொளி''
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

–இயக்குநர்

(72813)

# மரண அறிவித்தல்கள்

## சிவக்கொழுந்து சுந்தரலிங்கம்

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவக்கொழுந்து சுந்தரலிங்கம் 18-01-2000 அன்று காலமானார்.

இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் சுந்தரராஜன்(ஜேர்மனி), சுகுந்திராதேவி, சுகுமார் (சுவிஸ்), சுரேந்திரன் (சுவிஸ்), சுதேஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவிகா (ஜேர்மனி), சண்முககுலகுமாரன் (அதிபர் யா/சங்குவேலி அ.த.க. பாடசாலை) சுமதி(சுவிஸ்), நிரஞ்சனா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் காசிநாதனின் அன்புச் சகோதரரும் சஜீவன், சரவணன், நிசானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் தாவடி இந்து மயானத்தில் இன்று (19 - 01 - 2000) காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

மகன்— சு. சுந்தரராஜன்
மருமகன்— சு. சண்முககுலகுமாரன்
சுதுமலை தெற்கு. (72835)

## சின்னத்தம்பி வெள்ளைத்தம்பி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 1/7, மடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வெள்ளைத்தம்பி அவர்கள் நேற்று (18-01-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (19-01-2000) புதன்கிழமை காலை 10-30 மணியளவில் (புதியநேரம்) யாழ். புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்ரன் (மகன்)
தபாலகம், வண்ணார்பண்ணை.

1/7, மடம் வீதி,
யாழ்ப்பாணம். (72849)

## மருசலீன் யோசப்

நெடுந்தீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மருசலீன் யோசப் (கவுணர்—ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி) 17-01-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருசலீன்—கிறிஸ்தியானா தம்பதிகளின் மூத்த புதல்வரும் பிலோமினம்மாவின் பாசமிகு கணவரும் நிர்மலராணி, காலஞ்சென்ற ஆஞ்சலா, கமலா, கார்மேலா, கொலஸ்ரிக்கா (ஆசிரியை, நெடுந்தீவு மகாவித்தியாலயம்), ஜெனிற்றா, (நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர், நெடு. றோ. க. ம. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இரத்தினம் (கொழும்பு), பீற்றர், யேசுராஜன், நெல்சன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற யோசப்பு—கிறிஸ்தீனா தம்பதிகளின் மூத்த மருமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 18—01—2000 அன்று நெடுந்தீவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெனிற்றா
(மகள்)

6ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு. (72841)


ஆண்டு 2 — 6 வரை
மாதாந்தப் பரீட்சை
20 - 01 - 2000 அன்று
காலை 8-00 மணிக்கு
ஆரம்பமாகும்.

**BOND**
யாழ் நகர்.
(72842)



**CHEMISTRY**

2001-INORGANIC
Mon., Wed. 4 p.m.
2000 - Paper
Mon., Wed. 5 p.m.
2002
ஆரம்பமாகியுள்ளது
Mr. அன்பு
2001 Phy. - Heat
Mr. ஸ்பெல்மன்

A/L 2002
ENGLISH
Mr. Ramanathasan

**SHAMROCK**
(சி/10693)


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

## கூறுவிலை கோரல்

யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான காணியில் 6 அடி சுற்று 13 அடி நீளமான பூவரசுமரத்துக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. தேவையானோர் பார்வையிட்டு25-01-2000 ஆம் திகதி 10 மணிக்கு முன் கூறுவிலை தெரிவிக்கவும். இது சம்பந்தமாக வேலைப் பொறியியலாளரைச் சந்திக்கவும்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/10698)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
சரத்குமார்-தேவயானி
நடித்த
**சூரிய வம்சம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
[72846]



**ராஜா**
யாழ்ப்பாணம்
அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
**அவள் வருவாளா**
10.30, 2.30
[சி/10649]



**லிபேட்டி** அச்சுவேலி
முரளி - தேவயானி
நடித்த
**நீமணி**
காட்சிகள்: 10.30, 2.30
T. P. 070-212223
070-212678
[72730]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை பொன்னம்மா

வேலணை வடக்கைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பொன்னம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நாராயண பிள்ளை செல்லத்துரையின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற புனிதவதி, திருநாவுக்கரசு, குணபூசணம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோபாலபிள்ளை, காலஞ்சென்ற பரமசிங்கம் பிள்ளை, வசந்தாதேவி (கண்மணி), உலகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 33, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு இல்லத்தில் இன்று (19—01—2000) புதன்கிழமை காலை10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. திருநாவுக்கரசு
[மகன்]

இல. 33,
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு. (72826)

## ஆறுமுகம் வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய மின்சாரசபை உத்தியோகத்தர்)

துன்னாலை வடக்கு வெலிக்கன் தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் வேலுப்பிள்ளை 18—01—2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக்கணவரும் செங்காதேவி, கௌசலாதேவி, தேவபாலன், சிவபாலன், வசந்தாதேவி, ஜெயபாலன், யசோதேவி, நகுலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், விரசிங்கம், இராஜினி, இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யோகதாரணி, அருண், அஜசியா, அபிராமி, பவித்திரன் ஆகியோரின் அன்புமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-01-2000) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
கௌசலாதேவி
(மகள்)

துன்னாலை.
வடக்கு. (சி/10691)

## செல்லையா அமிர்தலிங்கம்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா அமிர்தலிங்கம் 18-01-2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா—விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சவரிமுத்து முத்தம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் அந்தோனி யாப்பிள்ளையின் அன்புக் கணவரும் அனுபியன் றெமலின் (சம்பத்திரிசியார் கல்லூரி) அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்ற அன்னம்மா, கந்தையா, முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரேசம்மா (ஜெயமணி), சிறில்யோசவ், நிற்றம்மா, பிலோமினா காலஞ்சென்ற மரியதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-1-2000) புதன்கிழமை காலை 10 மணியளவில் இல. 33, கதிரல் வீதியில் உள்ள ஜெயமணியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ். வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
யேசுதாசன் (செட்டியார்)
(சகலன்)

33, கதிரல் வீதி,
யாழ்ப்பாணம். (72834)

## செல்லையா துரைச்சாமி

(பிரபல சுருக்கு கேற் தயாரிப்பாளர் மானிப்பாய்)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் இந்துக் கல்லூரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா துரைச்சாமி நேற்று (18- 1- 2000) காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா—தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகனும், வைத்திலிங்கம்–பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், வைத்தீஸ்வரன், சுந்தரலிங்கம், தெய்வேந்திரம், கிருபாமூர்த்தி (கனடா), சந்திரவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், யோகாம்பிகை, பரமேஸ்வரி, புஸ்பவதனி (கனடா), வர்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜிதா (கொழும்பு), முகுந்தன், விந்துஜா, சுதர்சன், அனுரதன், யசிந்தன், சர்மிலன், சுகிர்தன், சகிலன், துவாரசேன் (கனடா), நிதுசன் (கனடா), புருசோத்மன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (19-1-2000)பகல்11மணிக்கு(புதியநேரம்)மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியடி,
மானிப்பாய். (72844)

## சாரணிய வழிகாட்டுநருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். மாவட்ட பெண் சாரணிய வழிகாட்டுநருக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் இயங்கும் தொழில் நுட்ப நிறுவனத்தில் பிற்பகல் 2. 30 மணிக்கு நடைபெறும்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள சிந்தனை நாள் நிகழ்வுகளுக்காக கொழும்பு செல்வதற்கு இரு சாரணியர்களைத் தெரிவுசெய்ய இருப்பதால் சகல வழிகாட்டுநர்களையும் கூட்டத்துக்கு வருகைதருமாறு மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார்.

[க-4]

## கட்சித்தாவலை அங்கீகரிக்கும் அரசமைப்புத் திருத்தம்:

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை

# அரசுக்குக் கிடைப்பது அசாத்தியம்

கொழும்பு, ஜன. 19

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறினாலும் அவர்கள் தொடர்ந்து எம்.பி.யாக செயற்படுவதற்கு அனுமதி அளிக்கும் விதத்தில் அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு அரசுத்தரப்பு பகிரத முயற்சி செய்துவருகின்றபோதிலும் —

அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அரசுத்தரப்புப் பெற்றுக்கொள்வது மிகவும் துர்லபமே என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எம். பிக்களுடன் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ், இ. தொ. கா, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் — ரெலோ, ஈ.பி.டி.பி (சுயேச்சைக்குழு) ஆகியவற்றின் எம். பிக்கள் மற்றும் அண்மையில் ஐ.தே.க விலிருந்து பிரிந்து அரசுதரப்பில் சேர்ந்த ஐந்து அதிருப்தி எம்.பி.க்கள் ஆகியோர் — அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த அரசமைப்புத் திருத்தத்தை ஆதரித்தால் கூட —

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுவதற்கு ஐ.தே.க. விலிருந்து மேலும் குறைந்தது பதினொரு எம். பி. க்களின் ஆதரவு அவசியமாகும்.

ஐ. தே. க. பட்டியல் மூலம் தெரிவான இ. தொ. கா தலைவர் தொண்டமான் உயிரிழந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஐ.தே.க. சார்பான ஒருவரையே அக்கட்சி நியமிக்க உள்ளது. அதனால் அரசுத்தரப்பை ஆதரிக்கும் இ.தொ.காவின் எம். பி.க்கள் பட்டியலில் ஒருவர் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர் விடுதலை கூட்டணியைச் சேர்ந்த ஐந்து எம்.பி.க்களும் கட்சி மாறுவதற்கான சட்டத் திருத்தத்தை ஆதரிப்பார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

புளொட் பட்டியலில் தேர்தலில் போட்டியிட்டு எம்.பி. யாகியுள்ள ரெலோ முதல்வர் அடைக்கலநாதன் (செல்வம்) கட்சித்தாவல்சட்டத்தை ஆதரிக்கமாட்டார் எனச் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### ஈ.பி.டி.பி. தரப்பில் ஒ வாக்குகளே

ஈ.பி.டி.பி. தரப்பில் ஒன்பது எம்.பி. களில் அறுவரே இப்போது நாடாளுமன்றில் பிரசன்னமாகி இச்சட்டத் திருத்தத்தை ஆதரிக்கக் கூடிய நிலையில் உள்ளனர். கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட இராமேஸ்வரன், இராமமூர்த்தி ஆகிய இரு எம்.பி.களின் இடத்துக்குப் புதியவர்களை நியமிப்பது தொடர்பாக ஏற்பட்ட பிணக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் அந்தச்சர்ச்சைக்கு முடிவு வரும் வரை புதியவர்களை நியமிக்க முடியாத நிலை உள்ளது. சுட்டுக் கொல்லப்பட்ட இக்கட்சி எம். பி. யும் 'தினமுரசு' ஆசிரியருமான ரமேஷ் நடராஜாவின் (அற்புதன்) இடத்துக்குக்கூட மேற்படி பிணக்குக்கு நீதிமன்றத்தீர்வு கண்ட பின்பே ஒருவரை நியமிக்க முடியும் எனக் கூறப்படுகின்றது. அத்தோடு இக்கட்சியில் அதிருப்தியுற்று நாட்டை விட்டு வெளியேறி இருக்கும் சந்திரகுமார், தங்கவேலு ஆகிய இருஎம். பி.க் களும்கூட இப்போதைக்கு நாடாளுமன்றுக்கு வந்து இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரிக்கப் போவதில்லை எனத் தெரிகிறது. இந்த இருவரின் பதவியும் காலாவதியாகி அவர்களின் இடத்துக்குப் புதியவர்கள் இருவர் நேற்று முற்பகல் பதவியேற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 20 ஐ. தே. க. எம். பிக்களாவது ஆதரிக்கவேண்டும்

இந்த நிலையில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஐ. தே. க. தரப்பிலிருந்து மேலும் சுமார் இருபது எம். பிக்களின் ஆதரவையாவது பெறவேண்டிய தேவை அரசு தரப்புக்கு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இத்தோடு ஐ. தே. க. விலிருந்து தாவி அரசுதரப்புக்குச் சேர்ந்த ஐந்து எம். பி.க்களையும் ஐ. தே. க. தனது கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து வெளியேற்றியுள்ளது. அந்த முடிவை ஆட்சேபித்து அவர்கள் ஐவரும் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுக்கள் மீது பெப்ரவரி 6 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட இருக்கின்றது.

தற்போதைய நிலையில் கட்சிமாறிய அவர்களை ஐ. தே. க. வெளியேற்றியது சரியே என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குமானால் அன்றைய திகதியிலிருந்து தமது எம். பி. பதவிகளை அவர்கள் இழப்பார்கள்.

எம். பி. க்கள் கட்சி தாவுவதை அனுமதிக்கும் அரசமைப்புச்சட்டத்திருத்தத்தை அத்திகதிக்கு முன் அரசு சட்டபூர்வமான தாக்குமானால் இவர்கள் ஐவரும் எம். பி.பதவியை இழக்கும் ஆபத்திலிருந்து பிழைத்துவிட முடியும்.

ஆனால் அத் திகதிக்கு முன்னர் அந்த அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றுவது துர்லபமே.

அதனால் இந்த ஐந்து எம். பிக்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகவே உள்ளது.

கட்சித் தாவலை அனுமதிக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர உத்தேசிக்கும் அரச தரப்பு அதேநேரம் —

சர்வஜனவாக்கெடுப்பை வைத்து நாடாளுமன்றத்தின் ஆட்சிக்காலத்தை நீடிக்கும் எண்ணம் தனக்கில்லை என்றும் —

குறிப்பிட்ட காலத்தில் — அடுத்த ஓகஸ்ட்டுக்கு முன் — பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்றும் — அறிவித்துள்ளது.

எப்படியும்பொதுத்தேர்தல் விரைவில் நடைபெறும் என்ற இச்சூழலில் ஐ. தே. க. விலிருந்து கட்சிதாவி அரசு தரப்புக்குச் செல்வதற்கு ஐ. தே. க. வின் எம்.பிக்கள் முன்வரமாட்டார்கள் எனக் கூறப்படுகின்றது.

தற்போதைய நிலையில் ஐ. தே. க. வில் தொடர்ந்து இருந்தால் அடுத்த தேர்தலிலும் அக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு எம். பி. யாக முடியும் என அவர்களில் பலர் கருதுகின்றனர்.

இந்த இறுதிநேரத்தில் கட்சி மாறி அரசுத் தரப்பில் சேர்ந்தால் மிக விரைவில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலின்போது அரசதரப்பில் வேட்பாளர் நியமனம் கிடைப்பதோ, அப்படிக் கிடைத்தால் அரசுத் தரப்பு வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெறுவதோ மிகக் கஷ்டமானது என அவர்கள் கருதுகின்றனர்.

இக் காரணத்தினால் அவர்கள் கட்சிதாவப் பின்னடிப்பதாகவும் கூறப்படுகின்றது.

(உ)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சமூக அபிவிருத்தி அக்கறைதேவை

### பட்டறை நிகழ்வில்வலியுறுத்து

வலி. மேற்கு, ஜன. 19

யாழ். மாவட்டத்தில் இன்று புனரமைப்பு வேலைகளே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் போது முன்பள்ளி ஆசிரியர்கள் கிராம மட்டத்தில் பிள்ளைகளுக்கு பாடம் புகட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாது, மக்களை அபிவிருத்தில் பாதையில் வழி நடத்துவதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும். சமூக அபிவிருத்தியிலும் அக்கறை கொள்வது அவசியம்.

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம் உள்ளூராட்சித் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் அபிவிருத்திக்கான சமூகத் தயாரரத்தல் அறிமுகப்பட்டறை மாத இறுதியில் நடைபெற்றது. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அதனை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ச.பரமேஸ்வரநாதன் மேற்கண்டவாறு சொன்னார்.

சங்கானை பிரதேசசெயலக நிர்வாக அதிகாரி எம். சிவராசா தலைமையில் அறிமுகப்பட்டறையின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

அறிமுகப்பட்டறையில் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 31முன்பள்ளி ஆசிரியர்கள் பங்கு கொண்டனர் இப் பயிற்சிப்பட்டறை தொடர்ந்து ஏழு நாள்கள் நடைபெற்றன. (அ-175)

## தொடரும் கொலைகளை நிறுத்த புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்

### புளொட் அமைப்பு அறிக்கை

தொடரும் கொலைகள் நிறுத்தப்பட்டு அழிந்து கொண்டிருக்கும் எம் இனத்தைக் காக்க அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு மக்களின் விடிவுக்காக உழைப்பதே கொல்லப்பட்டவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலி ஆகும்.

இவ்வாறு பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வ. விஜயரட்ணத்தின் கொலையைக் கண்டித்து சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற பாலிசவாதிகளின் சுடுகுழல் வெறியாட்டத்துக்கு பலியாகிய நகராதிபதி வடிவேலு விஜயரட்ணம், நகரசபை ஊழியர் முதலி பகிரதன் ஆகியோரது படுகொலைச் சம்பவம் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை நினைவுகூர்ந்து சிந்திக்க வைக்கின்றது

1974 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்ட போது அதைச் சகித்துக் கொள்ள முடியாத பேரினவாதச் சக்திகள் அந்த எழுச்சி விழாவைக் குழப்பி பல அப்பாவிகளைப் படுகொலை செய்தன.

அந்தப் பேரினவாதச் சக்திகளையும் மிஞ்சியவர்களாக எம் இனத்தவர்களே எம் மக்களை அழித்துக் கொண்டிருக்கின்றனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், அருமை பெருமையாக உள்ள மக்களின் சேவையாளர்கள் எனப் பலரையும் அர்த்தமற்ற முறையில் அநியாயமாகப் பலியாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

விடுதலைப் போராட்டத்தில் அனைவரும் பங்களிப்புச் செய்து ஆயுதம் ஏந்திப் போராடியவர்களே. ஏன் ஆயுதம் ஏந்தினோம் என்று புரியாமல் சொந்த மக்கள் மீதே அந்த ஆயுதங்கள் திருப்பப் பட்டுள்ளன. தாம் புரியும் இந்தக் கோழைத் தனமான செயல்களை நியாயப்படுத்த இனத் துரோகிகள் என முத்திரை குத்துகிறார்கள்.

ஏனைய தமிழ் அமைப்புக்களுக்கு மக்கள் ஆதரவு வழங்குவதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் தங்கள் அரசியல் வங்குறோத்தை மறைப்பதற்கு மக்கள் ஆதரவுள்ளவர்களை அழித்தொழிக்கின்றனர். என்றுள்ளது. (இ-க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அஞ்சலி

'பருத்தித்துறை நகரசபைத் தலைவரும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் மூத்த உறுப்பினருமான வடிவேலு விஜயரட்ணம் [செல்லக்கிளி] அவர்களின் மறைவு எமக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்து விட்டது'

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ. பி. ஆர். எல். எவ். ] யாழ். பிரிவினர் விடுத்துள்ள அறிக்கையில்மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

சிறந்த விளையாட்டு வீரரான அவர் 80 களின் முற்பகுதியிலேயே தமிழ் மக்களின் விடுதலைக்காக தான் தெரிவு செய்து கொண்ட பாதையில் செயற்பட்டார்.

1985 ஆம் ஆண்டு பாக்கு நீரிணையில் அவர் பயணம் செய்த படகு கடற்படையினரால் தாக்கப்பட்டது. அவர் கடலில் நீந்திக் கரைக்கு வரும் போது கைது செய்யப்பட்டார். இராணுவ சித்திரவதைக் கூடங்களிலும், சிறையிலும் ஒன்றாக இருந்தவர்களுக்கு அவரின் பங்களிப்புத் தெரியும். இராணுவ முகாமில் அவர் இருந்த போது நோய்வாய்ப்பட்ட சக தமிழ் அரசியல் கைதிகளைப் பராமரிப்பது, உணவு பரிமாறுவது உள்ளிட்ட பல பணிகளை ஆற்றியவர். வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட பின் அங்கு தமிழ் அரசியல் கைதிகள் நடத்திய போராட்டங்களுக்கெல்லாம் தோள் கொடுத்தவர்.

சிறைச்சாலையிலிருந்த போது சக அரசியல் கைதிகளாக இருந்தவர்களுக்கு சிலம்பம், உடற்பயிற்சி ஆகிய விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுத்தவர். 1987இன் முற்பகுதியில் வெலிக்கடைத் தமிழ்க் கைதிகளின் விடுதி சிங்களக் கிரிமினல் கைதிகளால் தாக்கப்பட்டபோது முன்நின்று செயற்பட்டவர்.

அன்னாரின் இழப்பு இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஒரு குறிப்பிடத்தகுந்த வெற்றிடமே. செல்லக்கிளியின் மறைவுக்காக அன்னாரின் குடும்பத்தினருக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றுள்ளது. [இ—க]

## குளிரூட்டி இயந்திரங்களைப் பொருத்துவதில் தாமதம்

### தொழில்நுட்பவியற் குழு வரவில்லை

அரியாலை, ஜன. 19

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறைக்குப் பொருத்துவதற்காகக் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட குளிரூட்டி இயந்திரங்கள் இன்னும் பொருத்தப்படவில்லை.

இவற்றைப் பொருத்துவதற்குக் கொழும்பில் இருந்து தொழில் நுட்பவியலாளர் குழு இன்னும் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரேத அறையில் வைக்கப்படும் சடலங்களைப் பழுதடையாது பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் நான்கு குளிரூட்டி இயந்திரங்கள் எடுத்து வரப்பட்டது தெரிந்ததே.

(இ-17)

## அறிவித்தல்

### சங்கானை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. து.)

கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான

# கிளைப் பொதுச் சபைக் கூட்டம்

காலம்: 2000 – 01 – 22

வடக்கு—கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளின் 23 ஆம் பிரிவின் கீழ் வடக்கு — கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உரித்தாக்கப் பட்டும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1998 – 5 – 19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட் டுள்ள விதிகளுக்கு அமைய சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைப் பொதுச் சபைக் கூட் டங்கள் 2000 – 1 – 22 ஆம் திகதி முற்பகல் 10. 00 மணிக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறும்.

கிளைப்பொதுச்சபைக்கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற் கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத் தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார் வையிடலாம்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுக மளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புக்களின் படி கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்துத் தங்கள் சனநாயக உரிமைகளை பயன்படுத்திக் கூட்டுறவு இயக்கத்தினை சனநாயக ஆளுகை கொண்டதாக செயற்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

செ. கு. சண்முகநாதன்
கூ. அ. உ. ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

கூட்டுறவு அலுவலகம்,
இல. 18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். (சி/10646)

## வரி அறவிடுவதற்கு நடவடிக்கை

வடமராட்சி, ஜன. 19

வல்வெட்டித்துறை நகர சபை இந்த ஆண்டு முதல் ஆதனவரி மற்றும் வர்த்தக நிலையங்களுக்கான வரி ஆகியவற்றை அறவிடத் தீர் மானித்துள்ளது.

இது தொடர்பாக வல் வெட்டித்துறை நகரசபைத் தலைவர் கே. சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில் இந்த ஆண்டு வரிகளை அறவிடும் போது உரிமையாளர்கள் இல்லாத ஆதனங்கள் இயங்காத வர்த் தக நிலையங்கள் ஆகியவற் றுக்கு வரிகள் அறவிடப்பட மாட்டாது.

அத்துடன் வன்செயல்கள் ஆரம்பமான காலத்திலிருந்து 1999 ஆம் ஆண்டுவரை ஆதனவரி வர்த்தக நிலைய வரி எதுவும் அறவிடப்பட மாட்டாது. இதற்கான தீர்மானங்களை சபை நிறைவேற்றியுள்ளது — என்றார். (இ-173)


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சர்வ மங்களகரமான பிரமாதி வருடம்
தைத்திங்கள் 5ஆம் நாள் (19-01-2000) புதன்கிழமை
காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரையுள்ள மிருகசீரிட
நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய மகர லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

திரு. திருமதி விஜயரட்ணம்
அவர்களின்
கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**தபேஸ்**
அவர்களுக்கும்



திரு. திருமதி சின்னத்துரை
அவர்களின்
செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
**தயந்தினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்
திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடை-
பெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்:

127, வி. எஸ். முதலி தோட்டம், முதல் தெரு,
ராகவா ரெட்டி காலனி, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 095.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி விஜயரட்ணம்
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

திரு. திருமதி சின்னத்துரை
5, கலட்டி அம்மன் தெரு,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(72794) (இரு வீட்டார் அழைப்பு)

# மங்களகரமான திறப்பு விழா

**அன்புடையீர்!**

நிகழும் பிரமாதி வருடம் தைத்திங்கள் 5 ஆம் நாள் இன்று (19-01-2000) புதன்கிழமை முற்பகல் 10.48 மணி முதல் 12.00 மணி வரை (புதியநேரம்) உள்ள சுபநேரத்தில்

## இல. 173, பலாலி வீதி, திருநெல்வேலி

என்னும் முகவரியில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

# எரிபொருள் நிரப்பு நிலையம்

# LANKA FILLING STATION

திரு. சி. வீ. கே. சிவஞானம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகைதந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## V.S.B. குறூப், ஜெசிபா ஏஜென்சி

### நிர்வாகப் பங்காளர்கள்.

தொலைபேசி: 2041 (சி/10667)

## இன்று ஆரம்பமாக இருந்த
# இஸ்ரேல் - சிரிய பேச்சுக்கள்
# திடீரென இடை நிறுத்தம்

ஜெருசலேம், ஜன. 19
இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையில் அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினிய மாநிலத்தில் இன்று மீண்டும் ஆரம்பமாக இருந்த அமைதிப் பேச்சுக்கள் காலவரையறை இன்றி ஒத்திப் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று திகதி எதுவும் இதுவரை குறிக்கப்படவில்லை என ஜெருசலேத்தில் இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் — சிரிய பேச்சுக்கள் நான்கு ஆண்டுகளின் பின்னர் கடந்த மாதம் ஆரம்பமாகின. இந்தப் பேச்சுக்களின் தொடர்ச்சியாக இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் சிரிய வெளியுறவுத்துறை அமைசசர் பாருக் அல் — ஸாரா ஆகியோர் இந்தமாத முற்பகுதியில் அமெரிக்காவில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

கடந்த 12 ஆம் திகதி முடிவடைந்த இந்தப் பேச்சுக்களில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இதனை அடுத்து பேச்சுக்களை இன்று மீண்டும் ஆரம்பிப்பது என முடிவு செய்யப்பட்டிருந்தது. தற்போது திடீரென பேச்சுக்கள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில்—

கோலான்குன்றுப் பகுதிகளில் இருந்து இஸ்ரேல் தனது படையினரை முற்றிலும் விலக்கிக் கொள்வதான அடிப்படையில் பேச்சுக்களை நடத்த இஸ்ரேல் வெளிப்படையாக உறுதிகூறாதவரை பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்று சிரியா தெரிவித்துள்து.ள

(இ-6-9)

## தெற்காசியாவில் சமாதானம் ஏற்பட
# காஷ்மீர் எல்லைப் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட வேண்டும்
## ஜெனரல் முஷாரப் தெரிவிப்பு

பீஜிங், ஜன, 19
தெற்காசியாவில் அமைதியும் பாதுகாப்பும் ஏற்பட வேண்டும் என்றால் காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டு முக்கிய பங்காற்ற வேண்டும் என்று பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயம் மேற்கோண்டு சீனா வந்துள்ள அவர் சீன அரச பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைக் கூறி உள்ளார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது—

அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளுடனும் சுமுகமான நட்புறவுடனும் கூட்டுறவுடனும் இருக்கவே பாகிஸ்தான் விரும்புகின்றது தெற்காசியாவில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பதற்றத்தைக் குறைத்து காஷ்மீர் உட்பட அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணவே எமது அரசு விரும்புகின்றது.

இது தொடர்பாக சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை பாகிஸ்தான் பெரிதும் வரவேற்கின்றது.

இப்படி ஜெனரல் முஷாரப் மேலும் தெரிவித்தார்.

(இ-6-9)

# கராச்சி நகரப் பகுதியில் பெரும் குண்டு வெடிப்பு!
## 8 பேர் பலி; 17 பேர் காயம்

இஸ்லாமாபாத், ஜன. 19
பாகிஸ்தானின் இரண்டாவது பெரிய நகரான கராச்சி நகரில் மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் குண்டு வெடிப்பில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும் 17 பேர் காயமடைந்தனர்.

மசூதி ஒன்றின் முன்னால் உள்ள கரும்புச்சாறு பிழியும் ஆலை ஒன்றின் உள்ளே இருந்த இயந்திரத்தின் அடியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். மக்கள் நெருக்கடி உள்ள அப்பகுதியில் மக்கள் நடமாட்டம் மிகுந்திருந்த மாலை வேளையே குண்டு வெடித்தது.

குண்டு வெடித்த இடத்தில் சுமார் 4 அடி ஆழமான பள்ளம் ஒன்று ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. குண்டு வெடிப்பால் அருகில் இருந்த

உலக அரங்கில்

மின்மாற்றி ஒன்றும் வெடித்துச் சிதறியது.

பல கடைகளும் வாகனங்களும் சேதமடைந்துள்ளன. இந்தக் குண்டு வெடிப்புக்கு நேற்று வரை எவரும் பொறுப்பேற்கவில்லை. (இ-6-9)

## உத்தரப் பிரதேசத்தில் 1,800 பேர் கைது

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநில மின்வாரியத்தை மாநில அரசு மூன்று பிரிவுகளாகப் பிரித்ததை எதிர்த்து ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆயிரத்து 800 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் ஊழியர்கள் அனைவரும் திங்கள் மாலைக்குள் பணிகளுக்குத் திரும்பாவிட்டால் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று மாநில அரசு அறிவித்திருந்தது.

ஊழியர்களின் இந்த வேலை நிறுத்தத்தால் மாநில மின் விநியோகமும் தண்ணீர் விநியோகமும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

உ
சிவமயம்
அகில இலங்கை இந்து மாமன்றத்தால்
பராமரிக்கப்படும்

கொழும்பு இந்துக்கல்லூரி, இரத்மலானை
மாணவர் இலவச விடுதியில்
மாணவர்களைச் சேர்த்தல்

மேற்படி விடுதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு 3 ஆம் வகுப்புத் தொடக்கம் 12 ஆம் வகுப்புவரை கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தமாணவர்களுக்கும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 01 - 2000

அதிபர்
கொழும்பு இந்துக்கல்லூரி, இரத்மலானை.
(சி. 10671)

# மியான்மரில் போதைப் பொருள் உற்பத்தியை நிறுத்த நடவடிக்கை

ரங்கூன், ஜன. 19
உலகின் மிகப்பெரிய ஹெரோயின் போதைப் பொருள் உற்பத்தி நாடுகளில் ஒன்றான மியான்மரில் அபின் உற்பத்தியில் ஈடுபடும் மக்களை அந்தத் தொழிலில் ஈடுபடாமல் தடுப்பதற்காக அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்றை மியான்மர் இராணுவ அரசாங்கம் அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்தத் திட்டத்தின்படி நாட்டின் வடபகுதியில் பெருமளவு அபின் உற்பத்தியில் ஈடுபடும் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு வேறு இடங்களில் குடியேற்றப்பட உள்ளனர். முதற்கட்டமாக 50 ஆயிரம் மக்கள் இவ்வாறு வேறு இடங்களுக்கு குடியேற்றப்பட உள்ளனர். இவர்களில் 10 ஆயிரம் பேர் ஏற்கனவே வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு விட்டனர் என்று அரசு தெரிவித்துள்ளது.

மியான்மரில் இருந்து இன்னும் 15 ஆண்டுகளில் ஹெரோயின் போதைப் பொருள் உற்பத்தியை முற்றாக நிறுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ-6-9)

# பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்டசெயலர் அடித்துக்கொலை

சென்னை, ஜன. 19
தமிழகத்தின் திட்டக்குடி மாவட்டத்தில் உள்ள ஹோதான் குடி என்ற கிராமத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர் முருகன் நேற்றுமுன்தினம் சில ஆயுதபாணிகளால் அடித்துக் கொல்லப்பட்டார்.

அவருடன் சென்ற பாட்டாளிமக்கள் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலர் திராவிடமணி அடிகாயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முருகன் கோதான்குடிக் கிராமத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது இந்தக்கொலையை யார் செய்தனர் என்று தெரியவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தில் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கொடி ஏற்றுவதை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு எதிர்த்து வந்ததாகவும் கூறப்பட்டது. (இ-6-9)

# மைக்டைசனை அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பும் முயற்சி தோல்வி

லண்டன், ஜன. 19
உலகின் அதிபார குத்துச் சண்டை வீரரான மைக்டைசனை லண்டனில் இருந்து அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பும் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இத்தமாத இறுதியில் பிரிட்டிஷ் குத்துச்சண்டை வீரர் யூலியஸ் பிரான்ஸிஸுடன் மோதுவதற்காக மைக்டைசன் லண்டன் வந்துள்ளார். அமெரிக்கப் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றத்துக்காகச்சிறைத் தண்டனை அனுபவித்தவர் டைசன். எனவே அவரைலண்டனுக்குள் நுழைய விடக் கூடாது என்று தெரிவித்து பிரிட்டிஷ் மகளிர் உரிமைக் குழு லண்டன் நீதிமன்று ஒன்றில் மனுச் செய்திருந்தது.

நீதிமன்றம் தற்போது அந்த மனுவை நிராகரித்துள்ளதுடன் இம் மாத இறுதியில் நடைபெற உள்ள குத்துச் சண்டைப் போட்டியில் டைசன் கலந்து கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் போட்டி முடிவடைந்ததும் டைசன் அமெரிக்கா திரும்பிவிட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(இ-6-9)

# ரஷ்யாவை இடை நிறுத்த முயற்சி

மொஸ்கோ, ஜன. 19
செச்சினியாவில் உள்ள பொதுமக்கள் மீது ரஷ்யப் படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி வரும் காரணத்தால் ஐரோப்பாவின் முக்கிய மனித உரிமைக் குழுவான ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றக் குழு உறுப்புரிமையில் இருந்து ரஷ்யா இடைநிறுத்தப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மொஸ்கோவுக்கு விஜயம் செய்துள்ள மேற்படி நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பிரிட்டனைச் சேர்ந்த ரஸல் ஜோன்சன் பிரபு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

1996 ஆம் ஆண்டு ரஷ்யா இந்த அமைப்பில் இணைந்து கொண்டது.

தற்போது செச்சினிய தலைநகர் குறோஸ்னி மீதும் ஏனைய நகர்கள் மீதும் ரஷ்யப் படையினர் நடத்தி வரும் தீவிர குண்டுத் தாக்குதல்களால் பொதுமக்கள் பாதிப்படைந்து வருகின்றனர். இது ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழுவில் உறுப்புரிமை பெற்றுள்ள 41 நாடுகளில் பல நாடுகளின் அரசுகளுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. இதனால் ரஷ்யாவை அமைப்பில் இருந்து இடை நிறுத்த வேண்டும் என்று அந்த நாடுகள்நிர்ப்பந்தம்கொடுத்து வருகின்றன என்று ஜோன்சன் பிரபு மேலும் தெரிவித்தார்

கண்ணீர் அஞ்சலி

எமது அங்கத்தவரும் நெல்லியடி லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் வீரகேசரிமுகவருமான

திரு. நாகராசா
அவர்களின் அன்புமனைவி

பரமேஸ்வரி

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெல்லியடி வாணிபர் கழகம்.

நெல்லியடி.
கரவெட்டி.
(சி/10686)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறி விட்டது

திருச்செல்வம் சுகந்தி என்பவரது தேசிய அ. அ, (இல-696092109V ) யும் விஷேட அ. அ. (இல--0907007022) யும் குளப்பிட்டிக்கும் உடுவில் அம்பலவாணர் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து காயத்திரி அரைக்கும் ஆலை, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(72805)

மட்டுவில் நுணாவிலைச் சேர்ந்த சின்னத்துரை கனகமணி ஆகிய எனது தேசிய அ. அ. (இல.17602574V) யும், விஷேட அ. அ. (இல. 091006190) யும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து J. S. T., இல. 15, கண்டி வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
(சி/10668)

இல. 09 குருசோ வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் மரியாம்பிள்ளை கிங்சிலி நரேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அ. (761022881V), விசேட அடையாள அட்டை (0901016390) ஆகியன 16-1-2000ஞாயிற்றுக்கிழமை குருசோ வீதிக்கும் சென். ஜோன்ஸ் பாடசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும்.
(72804)

முருகேசு இராசப்பா என்பவரது தேசிய அ. அட்டை விசேட அ. அட்டை இரண்டும் 11. 1. 2000 அன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கும் கோப்பாய் நாவலர் பாடசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பழம் றோட், கோப்பாய் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
(72814)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர்.
(72654)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 3 ஸ்ரீ A. 40 பரீனா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. யோகரட்ணம் 78, K.K.S வீதி, சுன்னாகம். (72778)

நல்ல நிலையில் உள்ள 12'' சீவல் பட்டடையும், குபேட்டா என்ஜினும் உடன் விற்பனைக்கு உண்டு. எந்த நேரமும் பார்வையிடலாம். தொடர்பு: து. தேவராசா கோட்டைக்காடு, மல்லாகம். (72744)

### சோதிடம்

பொய்யா மொழி சோதிடம் எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். தினமும் மாலை 2 மணிக்குப் பின் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்தில் சந்திக்கலாம்.
(72798)

### காணவில்லை

பாவிக்காத புதிய லுமாலா லேடிஸ் சைக்கிள் 12.1.2000 தொடக்கம் காணவில்லை. (இல. 55928363) தகவல் தெரிந்தவர்கள் கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தி. கந்தசாமி கற்பகப்பிள்ளையார்கோயில், சித்தன்கேணி.
(72781)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விள. இல. 9 89 மே / பா உதயன்,
(72810)

### மரக்கன்றுகள்

மா, பலா, தோடை, தேசிக்கன்றுகள் நல்ல இன குறோட்டன்கள் மற்றும் பூங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. இல. 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (72768)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 1935 — 10 — 22
விண்ணில்: 1999 — 12 — 20

### அமரர் மார்க்கண்டு கனகரத்தினம்

அன்பு நிறைந்த தந்தையே!
அன்பு, பாசம் காட்டி
அயராது உழைத்து
எம் வாழ்வை முன்னேற்றுவதற்காக
வழிகாட்டிப் பாடுபட்ட உம்மை
என்று நாம் இவ் வையகத்தில் காண்போமோ?

என்றும், உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
**மனைவி, பிள்ளைகள்.**

பாலாவோடை,
இணுவில்.
(72764)

# அறிவித்தல்

## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

## கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம்

காலம்: 2000 – 01 – 23

வடக்கு — கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளின் 23 ஆம் பிரிவின் கீழ் வடக்கு — கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1998 – 05 - 19 ஆந் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய நல்லூர் பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் 2000 — 01 — 23 ஆந் திகதி முற்பகல் 10 மணிக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்குச் சமூகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புக்களின் படி கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமூகமளித்துத் தங்கள் சனநாயக உரிமைகளைப் பயன்படுத்திக் கூட்டுறவு இயக்கத்தின் சனநாயக ஆளுகை கொண்டதாகச் செயற்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

செ. கு. சண்முகநாதன்
கூ. அ. உ. ஆணையாளர், யாழ். மாவட்டம்.

கூட்டுறவு அலுவலகம்,
இல. 18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10673)

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான

## விசேட கலந்துரையாடல் கூட்டம்

இடம்:- D. M. I கல்வி நிலையம்,
ஆரியகுளம் சந்தி.

நாள்:- 20-01-2000 வியாழக்கிழமை

நேரம்:- காலை 9.00 மணிக்கு
ஆரம்பமாகும்

குறிப்பு:- மேற்படி கூட்டத்துக்கு சமுகம் தராத ஆசிரியர்களுக்கு பின்னர் ஏற்படக் கூடிய பாதிப்புகளுக்கு நாம் பொறுப்பு அல்லர்.

நியமனம் பெற்றவர்கள் சார்பாக
யாழ். மாவட்ட
தொண்டர் ஆசிரியர் சங்கம்.

(72816)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 1929 — 06 — 10
மறைவு: 1999 — 12 — 20

### திருமதி தங்கம்மா சதாசிவம்


(காலஞ்சென்ற பிரதம தபாலதிபர் செல்லையா சதாசிவத்தின் அன்புத் துணைவி)

திருமகளாய்த் தினமும் திகழ்ந்து
திரு நிறைந்த வாழ்வு தந்து
அன்பால் எமை வளர்த்து
ஆதரவு பல வழங்கி
துணை மகளாய் நின்ற எம்
தூயவளே அன்னையே!
பரமனடி சேர்ந்த உம்
பாதங்களை வணங்குகின்றோம்.

**பிள்ளைகள்.**

47, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டுக்குளி.
(72820)

## 5-ம் ஆண்டு நினைவு அலைகள்



மேதகை உயர்திரு

### ஏரம்பு சோதிலிங்கம்

(மண்டைதீவு)

மண்ணுலகில்: 14-04-1926
விண்ணுலகில்: 15-01-1995

19 - 01 - 2000

அன்பு, பண்பு, பாசமாய் எமை வளர்த்து வாழ்வித்த ஆற்றலின் இருப்பிடமே! நீங்கள் பிரிந்து ஐந்தாண்டல்ல ஐந்நூறு ஆண்டுகள் ஆயிடினும் உங்கள் வீரதீரச் செயல்களை நாமல்ல தெரிந்தோர் பலரும் புகழ்பட இன்றும் இயம்பிடுவார். விண்ணுறையும் தெய்வத்துடன் தெய்வமாகி எம் இதயத்திலுள்ள உங்களைப் போற்றி வணங்கி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி!

**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர், சகோதரி.**

புகையிரத வீதி,
கொக்குவில்.
(சி/10687)

# உதயன்

## அவசர தேவை; விழிப்புணர்வு!

குடாநாட்டில் மேலும் இரு எய்ட்ஸ் நோயாளர்கள் இனங் காணப்பட்டிருக்கின்றனர் என்ற அதிர்ச்சி தரும் செய்தி வெளியாகியிருக்கின்றது.

உத்தியோகபூர்வ தகவல் களின்படி இதுவரை குடாநாட்டில் ஏழு எய்ட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டிருக்கின்றனர்

சமூகக் கட்டுப்பாடுகளாலும் விழுமியங்களாலும் கட்டுக் கோப்பாக இருந்த நமது சமூகம், அரசியல் பின்னனிகள், ஆட்சி மாற்றங்கள் போன்ற பின்னடைவுகளால் ஒழுங்கு முறையை இழந்து, கட்டுப் பாட்டைத் தவறவிட்டு, ஒழுக்கம் போய், அந்தரமான ஒரு நிலையில் நிற்கின்றது. இந்த இக் கட்டு வேளையில் இந்த அபாய மணி ஒலித்திருக்கின்றது.

கடந்த தசாப்தத்தின் முதல் பாதியில் குடாநாடு இருந்த நிலைமை வேறு. . இன்றைய நிலைமை வேறு.

அன்று ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒழுக்கம் எல்லாம் பேணப்பட்டன; வெளியுலக நாகரிக அவலம், பிழையான முறையில் நமது சமூகத்தைப் பீடிக்காமல் பார்த்துக் கொள்ளும் வழி முறைகள், ஏற்பாடுகள், சட்டங்கள், விதிகள் நடைமுறைப் படுத்தப்பட்டன; கலாசார சீரழிவுகள் தடுக்கப்பட்டன.

ஆனால் இன்று .....?

இன்றைய நிலைமை என்ன வென்பதை எழுத்தில் வடிக்கத் தேவையில்லை. சிகரெட், மதுவில் இருந்து உடலை விற்பது வரை சர்வசாதாரணமாகக் கருதும் — கலாசாரப் பின்னடைவுப் போக்கு — நமது சமூகத்தில் ஊடுருவி விட்டது. வழி காட்டிகளே — அதிகாரிகளே — தப்புச் செய்வதற்கு முன் மாதிரிகளாக விளங்கும் அவல நிலைமை. பல ''பெரியவர்கள்'', ''பிரபலஸ்தர்கள்'' எனக்கில்லையடி ஊருக்கடி உபதேசம் என்ற புதுமொழியை எழுத்துத் தப்பாது செயற் படுத்துகின்றனர்.

எய்ட்ஸைப் பொறுத்த வரை வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கட்ட வேண்டும். வெள்ளம் அணையை மீறினால் அதனைத் தடுப்பது எப்போதும் சாத்தியமே அல்ல என்ற நிலைதான் இன்று.

நமது சமூகக் கட்டமைப்பு முறை காரணமாக, பாலியல் சம்பந்தமான பொது அறிவு, சமூகத்தில் அதனை அறிந்திருக்க வேண்டிய இளவயதினர் மத்தியில் மிக மந்தமாகவே உள்ளது.

'எய்ட்ஸ்' நோய் தடுப்பாரின்றி பரவுவதற்கான முக்கிய காரணங்களுள் பிரதானமானது இது. இந்தச் சிக்கலில் இருந்து விடுபடாமல் 'எய்ட்ஸ்' ஆபத்திலிருந்து நமது அடுத்த தலைமுறையை நாம் காப்பாற்றுவது பெரும் கஷ்டம்.

எனவே இது விடயத்தில் இன்று அவசரமாகத் தேவைப்படும் முதல் அம்சம் எய்ட்ஸ் நோய் குறித்தும், அது பரவும் விதம் பற்றியதுமான விழிப் புணர்வு தான்.

நல்லொழுக்கத்தைப் பேணுவது எய்ட்ஸ் ஆபத்தைப் பெரிதும் குறைக்கும்; எய்ட்ஸ் பரவுதலைகட்டுப்படுத்தும் என்ற அறிவுரையை நமது இளம் சந்ததி மத்தியில் பசுமரத் தாணியாகப் பதிப்போமானால் இது விடயத்தில் அரைவாசிப் பிரச்சினை தீர்ந்து விடும்.

இது தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தும் கருத் திட்டங்களைச் செயற்படுத்தும் முயற்சியில் பொது அமைப்புகள் அவசரமாக ஈடுபட வேண்டிய காலகட்டம் இது.

நாம் வாளாவிருந்தால் வகை சொல்ல முடியாமல் போகும். வருமுன் காப்பதே சிறந்தது.

# மீன்பிடிக் கருவிகளை மீட்டு தருமாறு வடமராட்சி கிழக்கு மீனவர் கோரிக்கை

நெல்லியடி, ஜன. 19

வடமராட்சி கிழக்கிலுள்ள வத்திராயன், மருதங்கேணி ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது செம்பியன்பற்றுப் பாடசாலையில் தஞ்சமடைந்திருக்கும் கடற்றொழிலாளர்கள் தமது மீன்பிடி உபகரணங்களை அப்பகுதியிலிருந்து மீட்டுத் தருமாறு கோரி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

கடந்த 12—12—99 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக, இடம்பெயர்ந்துள்ள தாம் தாளையடி. புனித செபஸ்தியார் ஆலயத்திலும் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையிலும் தங்கி வந்ததாகவும்—

அங்கும் தமக்குப் போதிய பாதுகாப்பு இன்மையால், தாம் வெளியேறி 26-12-99 ஆம் திகதி செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தஞ்சமடைந்ததாகவும் இவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் கஷ்டப்பட்டு வருவதனால்' தமது சொந்த இருப்பிடங்களில் கைவிட்டு வந்த கடற்றொழில் உபகரணங்களை மீட்டுத் தந்தால் ஓரளவு தாம் நிம்மதியாக வாழ முடியும் என்று வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் ஊடாக இவர்கள் மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

(இ-109)

## தமிழ்மொழி மூல பாடநூல்கள் இன்னும் சீராக விநியோகமில்லை

### தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை

திருகோணமலை, ஜன. 19

புத்தாயிரம் ஆண்டுக்கான முதலாம்தவணை ஆரம்பித்து இரண்டு வாரங்கள் கடந்த நிலையிலும் தமிழ் மொழி மூலப் பாடநூல்கள் இன்னமும் சீராக விநியோகிக்கப் படாமை கவலை தருகிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பாட நூல்கள் விநியோகம் இவ்வாறு தமிழ்மொழிப் பாடசாலைகளுக்கு தாமதப்படுத்துவதும் தமிழ், முஸ்லிம் மாணவர்களின் கல்வியில் சம வாய்ப்பின்மையை ஏற்படுத்துவதும் தொடர்கதையாகி விட்டது.

தமிழ்மொழி மூலப் பாட நூல்கள் பல இன்னும் அச்சிடப்படாத நிலையில்உள்ளது. இது குறித்து கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—என்று அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## முனீஸ்வரன் வீதி திருத்தப்படுகிறது

அரியாலை, ஜன. 19

யாழ். நகரில் பஸ் நிலையத்துக்கு முன்னால் ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாகச் செல்லும் முனீஸ்வரன் வீதியைத் திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக குன்றும் குழியுமாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இந்த வீதி காணப் பட்டது.

தற்போது இந்த வீதிக்கு புதிதாகக் கற்கள் போடப் பட்டு தார் ஊற்றப்பட்டு வருகிறது.

(இ-17)

## வடமராட்சிக்கடலில் மூங்கில் படகு ஒதுங்கியது

தென்மராட்சி, ஜன. 19

வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்கரையில் கடந்த சனியன்று பர்மா நாட்டு மீனவர்களின் மூங்கில் படகு ஒன்று கரையொதுங்கியது.

படகில் மீன்பிடி உபகரணங்கள், சமையல் பாத்திரங்கள் சமையல் பொருள்கள் ஆகியவை காணப்பட்டன.

கரையொதுங்கிய படகினை இந்தப் பகுதி மக்கள் கரையில் கொண்டு வந்து வைத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கடற்கரையில் அடிக்கடி இவ்வாறான படகுகள் கரையொதுங்குவது குறிப்பிடத் தக்கது. (ஐ-171)

## அனுமதி அட்டை

யாழ்ப்பாணம். ஜன. 19

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1998, 1999 ஆகிய ஆண்டுகளில் ஆண்டிறுதிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான ஆங்கில பாடத்துக்கான செயன் முறைப் பரீட்சைகள் எதிர் வரும் 22 ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை அலுவலக நேரத்தில் உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது.

(இ-4)

# புதுப் பொலிவுடன் எழுந்து நிற்கும் கோப்பாய்பிரதேசசெயலகஅலுவலகம்

## இன்றுஅதன் திறப்புவிழா

**வலி.** கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக நவீன வசதிகளுடன் கட்டப் பட்டு புதுப்பொலிவுடன் திகழும் கோப்பாய் பிரதேச செயலக இரண்டு மாடிக் கட்டடம் இன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட உள்ளது.

யாழ்ப்பாணத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள பிரதேசமே வலி. கிழக்குப் பிரதேசம். வடக்கே பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளையும் கிழக்கே தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவையும், தெற்கே நல்லூர் பிரதேச செயலர் பிரிவையும், மேற்கே உடுவில் பிரதேச செயலர் பிரிவையும் எல்லைகளாகக்கொண்டு அமைந்தது வலி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு,

இங்கு வாழும் மக்களுக்குச் சேவையாற்ற என இது நாள் வரையும் ஒரு நிரந்தர பிரதேச செயலகக் கட்டடம் இல்லாதிருந்தது. இந்தப் பிரதேச செயலகத்தைச் சொந்தக் கட்டடத்தில் இயங்க வைப்பதற்குக் காலத்திற்குக் காலம் அங்கு கடமையாற்றிய பிரதேச செயலர்கள் பெரும் முயற்சிகள் எடுத்து வந்தனர். எனினும் இந்த முயற்சிகள் யாவும் தோல்வி அடைந்தன. தற்போது இங்கு பிரதேச செயலராகக் கடமையாற்றும் க. கேதீஸ்வரனும் ஊழியர்களும் மேற்கொண்ட பெரு முயற்சி வெற்றி பெற்றுள்ளது. இதன் பயனாக எமக்கு ஒரு புதுப் பொலிவுடன் கூடிய அழகிய பிரதேச செயலகக் கட்டடம் கிடைத்துள்ளது.

### பொதுமக்கள் அளித்த நிதி உதவி

இந்த அழகிய கட்டடத்தில் இன்று முதல் பிரதேச செயலகப் பணிகள் ஆரம்பிக்கப் படுவது வலிகாமம் கிழக்கு மக்களாகிய எமக்குப் பெரும் மகிழ்வைத்தருகின்றது. இந்த நிகழ்வானது வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

அந்த வகையில் இப் பிரதேச செயலகக் கட்டடம் அமைக்கப்படுவதற்கு உறுதுணையாக இருந்து பாடுபட்ட பிரதேச செயலரும் செயலக ஊழியர்களும் பிரதேசப் பொதுமக்களும் பாராட்டுக்குரியவர்கள்.

செயலகக் கட்டடத்தை அமைப்பதற்கு உரிய நிதியை அரசு வழங்குவதற்கு உறுதி அளித்திருந்தது. எனினும் கட்டடம் அமைப்பதற்கான நிலத்தை பிரதேச செயலகமே கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நெருக்கடி நிலை பற்றிய விடயங்களைப் பிரதேச செயலர் பொதுமக்கள் முன் வைத்தார். இதை அடுத்து காணிக் கொள்வனவுக்கான நிதி உதவியை தாங்கள் வழங்குவதாக பொதுமக்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களிடம் இருந்து காணிக் கொள்வனவுக்கான பணம் சேகரிக்கப் பட்டது. மக்கள் தம்மால் இயன்ற நிதியை வாரி வழங்கினார்கள். இதனால் குறுகிய காலத்திலேயே செயலகத்துக்கான காணி கொள்வனவு செய்யப்பட்டது.

### ஒன்றரை வருட காலத்தில் கட்டடம் பூர்த்தி

அதனை அடுத்து கட்டடம் அமைக்கும் வேலைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டு ஒன்றரை வருட காலத்தில் கட்டட வேலைகள் அனைத்தும் முடிவுற்றுள்ளன. இன்று அழகிய முகப்புத் தோற்றத்துடனும் புதுப் பொலிவுடனும் நிமிர்ந்து நிற்கின்றது செயலகக்கட்டடம். வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவு மக்களின் ஒற்றுமைக்குச் சான்று பகர்ந்து உயர்ந்து நிமிர்ந்து நிற்கின்றது அது.

### பிரதேசத்தின் தனித்துவம்

கல்வி, கலை, கலாசாரம், விருந்தோம்பல் போன்றவற்றின் உறைவிடமான வலி. கிழக்குப் பூமி இன்று ஒற்றுமையின் உதாரணமாகவும் உயர்ந்து நிற்கின்றது.

தமிழரின் பாரம்பரியத்தை எடுத்துக் கூறுவதும் தற்போதும் அழியாமல் எமது மக்களால் கட்டிக் காக்கப் பட்டுவருவதுமான 'வசந்தன் கூத்து' இந்தப் பிரதேச மக்களின் சொத்தாக உள்ளது. அத்துடன் யாழ்ப் பாணத்தில் எங்கும் இல்லாதவாறு எமது பிரதேசத்தின் வாதரவத்தைக் கிராமத்தின் தனித்துவமான கலைவடிவம் — மகாபாரதத்தின் ஓர் அம்சமான — 'பப்பரவாகன்' கூத்தும் இந்தப் பிரதேசத்துக் குப் பெருமை தேடித் தந்துள்ளது.

அத்துடன் சிறுப்பிட்டி வை. தாமோதரம்பிள்ளை, கோப்பாய் வடக்கு சபாபதி நாவலர், இருபாலை சேனாதிராச முதலியார், அச்சுவேலி சுவாமி ஞானப் பிரகாசர், சிவாகமஞான பானு சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், சங்கீத இசை மேதையும் நடிகருமான பெரியார் ஆ.க. தம்பிமுத்து ஆகிய பெரியவர்களால் ஆசீர்வதிக் கப்பட்ட இந்தப் புண்ணிய பூமியில் இன்று எமது மக்களுக்கு என்று ஒரு நிரந்தர செயலகக் கட்டடம் அமைக் கப்பட்டது புண்ணியசெயலே.

இவ்வாறான சிறப்புக்களை எல்லாம் தன்னகத்தே கொண்ட வலி. கிழக்கு மக்கள் தமது அரசாங்க அலுவல்களை நிறைவேற்றுவதற்கென தமது முயற்சியால் எழுப்பிய செயலகக் கட்டடம் அவர்களது ஒற்றுமையையும் பாரம்பரிய பண்பாட்டையும் நிலை நிறுத்தி உயர்ந்து நிற்கின்றது என்பதை எவராலும் மறுக்க முடியாது. (இ-6)

செ. புஷ்கரணி
கோப்பாய்

## நாளை

தை 06

வியாழக்கிழமை

திதி: சதுர்த்தசி

பிற்பகல் 1.26 வரை

நட்சத்திரம்: திருவாதிரை

காலை 7.18 வரை.

புநர்பூசம்

வைகறை 5.46 வரை

பூரணை விரதம்

சுபநேரம்: 8.05—9.35

ராகுகாலம்: 2.05—3.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## உதய வாக்கு

உலகில்கடமையும் அன்பும் ஒன்று சேரும் போது தான் அவ்வன்பு வேரூன்றி நிற்கும்.

-ரவீந்திரநாத் தாகூர்

# இன்றும் நாளையும்

அரியாலை, ஜன. 19

திருநெல்வேலி பலாலி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையம் இன்று புதன்கிழமை காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பார்.

(க-17)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன், ஜன. 19

புன்னாலைக்கட்டுவன் கணேசா சனசமூக நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் ம. செல்வராசா இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அடிக்கல்லினை நட்டு வைப்பார்.

இடம் பெயர்வின் பின் — கடந்த நான்கு வருடங்களாக தற்காலிகமாக வீடொன்றில் இந்த சனசமூக நிலையம் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சனசமூக நிலையக் கட்டடத்துக்கு பிரதேச சபையின் விசேஷ நிதியில் இருந்து ஒன்றரை இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க-133)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 19

சைவப் புலவர் சு செல்லத்துரையின் ஆக்கமான 'வாக்கும் வாழ்வும்' நூல் வெளியீடு நாளை வியாழக்கிழமை காலை 9. 30 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அதிபர் அ. பேரம்பலம் தலைமையில் நடைபெறும்.

நூல் மதிப்புரையினை மூத்த பத்திரிகையாளர் செல்வப்பா நடராசா நிகழ்த்துவார்.

அன்றைய தினம் இளவாலை வள்ளுவர் கழகத்தின் தொடக்க விழாவும் இடம் பெறவுள்ளது. (க)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, ஜன. 19

அளவட்டி மேற்கு முருங்கையப்புலம் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சுகாதார நிலைய புதிய கட்டடத் திறப்புவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு ஸ்ரீரங்கன் சனசமூக நிலையத் தலைவர் த. குணபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் வலி. வடக்கு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல், வலி. வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைமகள் சிவராசா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

பல சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(க-152)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தடியில் அமைந்திருக்கும் அன்பு இல்லத்தில் ஸ்ரீ சத்தியசாயி பகவான் போயா தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

என். நவரத்தினம் தலைமையில் சாயி பஜனை, காயத்திரிமந்திர ஜெபம், தியானம் ஆகியன இடம்பெறவுள்ளன.

(க-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜன. 19

திருநெல்வேலி ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் போயா தின ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் காயத்திரி மந்திர ஜெபம், இலட்ச அர்ச்சனை, தியானம், பஜனை, சொற்பொழிவு ஆகியன இடம் பெறும். (க-30)

யாழ்ப்பாணம், ஜன. 19

தெல்லிப்பழை, பன்னாலை சேர். கனகசபை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மறு சீரமைக்கப்பட்ட கட்டடபுகுவிழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணியளவில் மேற்படி பாடசாலை அதிபர் நா. ஆனந்தராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த விழாவில் வலி. வடக்கு பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான திருமதி ப. திலகநாயகம்போல் பிரதம விருந்தினராகவும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ். வதிவிடப் பிரதிநிதி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(இ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 19

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும்.

''உலக மயமாதலும் அதன் விளைவுகளும்— ஒரு பொருளியல் நோக்கு'' எனும் தலைப்பில் கலந்துரையாடல் இடம் பெறும்.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் — சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன் தலைமையுரையினையும், யாழ். பல்கலைகழக பொருளியல்துறைத் தலைவர் ப. சிவநாதன் தொடக்க வுரையினையும் நிகழ்த்துவர்.

(க)

★ ★ ★

கொக்குவில், ஜன. 19

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் தரம் ஒன்றின் கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் பொ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியம் கலந்து கொள்வார்.

க-69)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜன. 19

வடக்கு-கிழக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் பிரதேசரீதியாக நடத்தப்பட்டுவரும் ஒரு வருட டிப்ளோமா தையல்—மனையியல் பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்பும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 16 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் இன்று புதன்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். றக்கா வீதியில் உள்ள இல. 50 பணிமனைக்கு நேரில் சமுகம் தருமாறு யாழ். பிரதேச செயலர் பி. செந்தில்நந்தனன் கேட்டுள்ளார்.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றுபவர்களுக்கு ஊக்குவிப்பு படியும் வழங்கப்படும்.

(க-30)

★ ★ ★

வடமராட்சி, ஜன. 19

புத்தாயிரமாம் ஆண்டினை முன்னிட்டும், கல்லூரியின் சுபீட்சம் வேண்டியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இன்று புதன்கிழமை முற்பகல் மத நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்து, மெதடிஸ், கத்தோலிக்க மதநிகழ்வுகளை முறையே அல்வாய் மாலுசந்திப்பிள்ளையார் கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ எஸ். நடராஜக்குருக்களும், பருத்தித்துறை சேகர குருவானவர் அருட்திரு ஜேம்ஸ்மேதர் அடிகளும் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பி. எம். இமானுவேல் அடிகளும் நடத்துவர்.

(க-173)

## போலி அ. அட்டை பெற லஞ்சம்

கொழும்பு, ஜன. 19

போலி அடையாள அட்டை வழங்குவதற்காக லஞ்சமாக சாராயப் போத்தலைப் பெற்றதாகக் கூறப்படும் கிராம சேவையாளர் ஒருவர் பண்டாரவளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை நகைக் கடை ஒன்றில் பணிபுரியும் ஒருவர் விடுதலைப்புலி அமைப்பைச்சேர்ந்தவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டதாகவும்—

அவருக்கு போலி அடையாள அட்டையை வழங்கப் பிரஸ்தாப கிராம சேவையாளர் லஞ்சம் பெற்றார் என்றும்— பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தநபர் தொடர்பான விசாரணைகளைப் பண்டாரவளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-க-3)

## மட்டுவில் வீதி மோசமான நிலையில்

சுன்னாகம், ஜன. 19

கனகன்புளியடிச் சந்தியில் இருந்து மட்டுவில் அம்மன் கோயில் வரையான புத்தூர் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இப்பகுதியில் கற்கள் பறிக்கப்பட்டுள்ள போதும் நீண்ட காலமாகத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. தேங்காய் வியாபாரிகள் இப்பாதையையே அதிகம் பயன்படுத்தி வருகிறார்கள். அத்துடன் பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வீதி சேதமுற்று இருப்பதால் பெரும் சிரமத்துடனேயே பயணத்தைத் தொடர வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

## இலக்கியப் போட்டிகள்

'யுனெஸ்கோ' நிகழ்ச்சித் திட்ட அனுசரணையுடன் தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான இரண்டாம் கட்ட இலக்கியப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

''சமாதானமும் சகிப்புத் தன்மையும்'' எனும் கருத்தை உணர்த்துகின்ற சித்திரம், கட்டுரை, கவிதை மற்றும் நாடகம் ஆகியவற்றுக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் தரம் 6 தொடக்கம் 8 வரைக்கும் சித்திரம், கட்டுரை ஆகியனவும் தரம் 9 தொடக்கம் 11 வரைக்கும் நடனம், கவிதை, நாடகம் ஆகியனவும் இடம்பெறும் என தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ - 10)

## தட்டுப்பாடு

சுன்னாகம், ஜன. 19

யாழ். குடாநாட்டில் பல்வேறு பால்மா வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. அங்கர் பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன் விலையும் ஏறியுள்ளது.

இதேவேளை குழந்தைப் பால் உணவான எஸ். எம். ஏ., லக்ரோஜன் ஆகியவற்றுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. (இ-27)

## ஆயுள்வேத ஆஸ்பத்திரி திறப்பு

வலி. கிழக்கு, ஜன. 19

கொக்குவிலில் ஆயுள்வேத வைத்தியசாலைக் கிளை ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் வைத்தியசாலையைத் திறந்து வைப்பார்.

(இ-க-69-180)


## வாழ்த்துகின்றோம்

A/L பரீட்சையில் இந்துசமயத்தில் ''A'' பெறுபேறு அடையச் செய்த

சைவப்புலவர் **கந்த. சத்தியதாசன்** (B.A)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

விசேட வகுப்பு மாணவர்கள்.

(72818)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 — 09 — 1947

உதிர்வு 19 — 01 — 1999

### அமரர் செல்வராசா செல்வலிங்கம்

(கிராம உத்தியோகத்தர், அல்வாய் வடமேற்கு)

என்றுமே எம்மிதயக் கருவறையில்
எழுந்தருளும் எந்தையே இடியெனவே
அன்றெழுந்த முகாரியின் அதிர்வதனால்
அமிழ்ந்தின்று ஆண்டொன்று ஆயிபே
இன்றுவரை நீ பிரிந்தும் நினைவழியா
இருப்பினை எண்ணியுளந் தேறியபே
சென்றவிடம் சிறந்தோங்கும் உன்சேர்வால்
சேர்ந்திணைந்தே நாங்குலிக்கிறோம் உன் நினைவை!

— குடும்பத்தினர்

தகவல்:
மகன்: செ. சாம்பசிவம்
(யாழ். விஞ்ஞானபீடம், பல்கலைக்கழகம்).

''மலர் மகால்''
அல்வாய்.

(72806)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி நல்லம்மா தம்பிஐயா

தோற்றம் 17—03—1914

மறைவு 21—12—1999

பாசத்தின் பிறப்பிடமே அம்மா - காலன் வீசிய
பாசக்கயிறு உன்னையும் விடலையே - எம்
அன்புக்குரியவளே இனி எந்தப் பிறவியில்
அன்னை உன்னை அடைவோமோ?

எமது தாயாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் வேளையில் அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும் கடித மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (19 - 01 - 2000) புதன் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வேம்பன் லேன்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். [72823]

# ஒரு கோடி 80 லட்சம் ரூபா செலவில் அச்சுவேலி ஆஸ்பத்திரிக்குக் கட்டடம்

வலி கிழக்கு, ஜன. 19
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் கட்டடத் தொகுதிகளை அமைப்பதற்கு மாகாண சுகாதார அமைச்சு ஒரு கோடி 80 லட்சம் ரூபாவை ஒதுக்கி உள்ளது.

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகம் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பிரேரணையின் பேரில் இந்த நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநோயாளர் பகுதி, மருந்தகம், களஞ்சியம், ஆய்வு கூடம், அவசர சிகிச்சைப் பிரிவு, தங்குமிடம், மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகம், சிறு சத்திர சிகிச்சை நிலையம் போன்றவற்றுக்கான வசதிகள் அடங்கிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்காகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கட்டட நிர்மாணிப்புக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தொடங்கப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-180)

## சங்கானை, சுன்னாகம் ஊடாக சாவகச்சேரிக்கு பஸ் சேவை

சங்கானை, சுன்னாகம் ஊடாக சாவகச்சேரி வரையிலான பஸ் சேவை மீண்டும் இம்மாத முற்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சங்கானை ஸ்ரீபாரதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இச்சேவையின் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வே. சோ. சொக்கலிங்கமும் கௌரவ விருந்தினராக செயலாற்று முகாமையாளர் சு. மணிவாசகனும் கலந்து கொண்டு சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

(இ-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி செல்லம்மா முத்துக்குமாரு**

தோற்றம்:
10-05-1902

மறைவு:
20-12-1999

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

42, பொன்னம்பலம் வீதி,
அரியாலை.

(72791)

## குழந்தை காயம்

யாழ்ப்பாணம், ஜன. 19
பொங்கல் தினத்தன்று, பொங்கல் அடுப்பினுள் தவறி விழுந்து ஒன்றரை வயது ஆண் குழந்தை ஒன்று காயமடைந்தது.

உடுவிலில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கனகலிங்கம் குயின்சன் என்ற குழந்தையே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஐ-15)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 19
தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையில் தரம் 8, 9, 11 ஆகிய வகுப்புகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## பிறந்த நாள் நினைவு





**Dr. விஸ்வநாதன் சின்னையா**
(நிலப்பிரபு, குளுவான், மலேசியா)
பிறப்பு: 19-01-1896 (தொல்புரம்)
இறப்பு: 13-12-1975 (மலேசியா)

திருமதி
**வள்ளியம்மை சின்னையா**
(குளுவான், மலேசியா)
பிறப்பு: 01 - 08 - 1910
இறப்பு: 30 - 01 - 1942

திதி: 19 – 01 – 2000

அன்னையும் தந்தையும் தானே - பாரினில்
அண்டசராசரம் கண்கண்ட தெய்வம்
தாயினும் கோயில் இங்கேது - ஈன்ற
தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் ஏது?
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
என்றென்றும் உங்களை நினைந்து வாழும்
**மகள்**

பாணாவெட்டி, தொல்புரம்.

(72644)

யாழ். நகரின் மத்தியில்

# நடைபாதைக் கடைகள் அப்புறப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 19
நகரின் மத்தியில் ஜன நெரிசலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள நடை பாதைக் கடைகளை அப்புறப்படுத்த யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நடைபாதைக் கடைகளை அகற்றி அவற்றை, பிரதான சந்தைக்கு அருகில் அமைக்க இடம் ஒதுக்கப்படவிருக்கின்றது.

ஜனநெரிசலைத் தவிர்க்கும் வகையில் முதல் கட்டமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும்—

அடுத்த கட்டமாக வேறும் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன என்றும்—

மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

யாழ். மாவட்டத்தில் இருந்து

## விண்ணப்பித்த சகலருக்கும் 'ஈ-மெயில்' கிடைக்க வாய்ப்பு

புத்தாயிரமாம் ஆண்டை ஒட்டி இரண்டாயிரம் பேருக்கு இலவசமாக இன்ரநெற், ஈமெயில் வழங்கும் ரெலிக்கொம் நிறுவனத்தின் திட்டத்துக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 340 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

நாடெங்கிலும் இருந்து இந்த வசதியைப் பெறுவதற்காக ஆயிரத்து 600 பேரே விண்ணப்பம் செய்துள்ளனர் என்றும்—

இதன் காரணமாக யாழ் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த சகலருக்கும் இந்த வசதி கிடைக்கும் என்றும்—

ரெலிக்கொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் இந்த வசதியைப் பெற விண்ணப்பித்துள்ளதால், தனியாக இணைப்புக் கருவிகளைப் பொருத்த வேண்டும் என்று ரெலிக்கொம் நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## லயன்ஸ் கழகம் நடத்தும் அபிவிருத்திக் கருத்தரங்கு

லயன்ஸ் கழகங்களின் சர்வதேச சங்கத்தின் 306 பி மாவட்டத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தலைமைத்துவ அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 30 ஆம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் பங்குபற்றுவார்.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம். திருநாவுக்கரசு மற்றும் மங்கையர்க்கரசி திருநாவுக்கரசு ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் லயன்ஸ் கழக 9ஆவது பிராந்தியத்தின் தலைவர் கே. தணிகாசலம், 10 ஆவது பிராந்தியத்தின் தலைவர் ஏ. தங்கேஸ்வரன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

லயன்ஸ் கழக உறுப்பினர்களான பேராசிரியர்கள் வி. ஆறுமுகம், எஸ். சத்தியசீலன் ஆகியோர் விசேட உரை நிகழ்த்துவர்.

இந்தக் கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை லயன்ஸ் கழகத்தின் தலைமைத்துவ அபிவிருத்திக்குப் பொறுப்பான மாவட்டத் தலைவர் எஸ். பத்மநாதன் செய்து வருகிறார்.

(உ-3)

## பேராசிரியர் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஜன 19
பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை இன்று புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் பதில் துணைவேந்தரும் கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறுகின்றது.

உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அஞ்சலியுரை ஆற்றுவார். நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் மெய்யியற்றுறைத் தலைவரும் சைவ சித்தாந்தப் பேராசிரியருமான கலாநிதி வேலுப்பிள்ளை இராமகிருஷ்ணன் நிகழ்த்துவார்.

''சைவசித்தாந்த நோக்கில் யாழ்ப்பாண நாகரிகம்'' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை இடம்பெறும்.

புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் நன்றியுரை வழங்குவார்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுக் குழுவினரும் புவியியற்றுறையினரும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளனர்.

(ஐ-7)

BESKORTS (Lodging)
பெஸ்க்கோட்ஸ்
(தங்கு விடுதி)

கொழும்பு நகருக்கு வருவோருக்கு எல்லா வசதிகளுடனும் குடும்பத்துடனோ, தனியாகவோ, தங்குவதற்கு ஏற்ற இடம் ''பெஸ்க்கோட்ஸ்'' தங்குவிடுதி (Beskorts Lodging).

இணைந்த குளியலறை, அறையிலேயே
தொலைத்தொடர்பு வசதி, மருத்துவ வசதி
நகரத்தின் மத்தியில் அமைந்தது

BESKORTS LODGING,
79, Messenger St, Colombo 12.
T. Phone - 338562, 329043

(72648)

# கண்ணீர் அஞ்சலி

குருபரன் தொலைத் தொடர்பு உரிமையாளர்
வ. சிவலிங்கம் அவர்களின் தாயார்

## திருமதி வல்லிபுரம்

18-01-2000 அன்றுகாலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

சி. நாகலிங்கம்
குடும்பத்தினர்.
(உரிமையாளர் லிங்கம்ஸ் பந்தல்)

கரணவாய் தெற்கு. (72811)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 19 — 08 — 1905
உதிர்வு: 19 — 12 — 1999

## திருமதி பொன்னையா நாகம்மா

*வாழ்வில் ஒளியேற்றி நாம் வாழ வழி அமைத்தாய்!*
*உழைப்பில் உயர்வு தந்து உள்ளத்தில் உறைந்து விட்டாய்!*
*உயிரிங்கே துடிக்குதம்மா உனைப்பிரிந்து வாடுதம்மா*
*பாசத்தின் பிறப்பிடமே பரிதவிக்கின்றோம் நீ இன்றி!*

19—12—99 இல் சிவபதமடைந்த எமது தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19-01-2000) நடைபெறுவதால் இந்த நிகழ்வில் கலந்து, தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
பொன்னையா வேலாயுதபிள்ளை
குடும்பத்தினர்.
[ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கைவங்கி]

தற்காலிக முகவரி: தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
நிரந்தர முகவரி: இல.27, 4ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

[72722]

# சுன்னாகத்தில் திருட்டு

சுன்னாகம், ஜன. 19

சுன்னாகம் நகரப் பகுதியில் இரவு வேளை கடையொன்றில் திருட்டு இடம் பெற்றுள்ளது.

சந்தையின் தெற்கு வீதியில் உள்ள மேற்படி கடையின் ஓட்டைக் கழற்றி உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பால்மா வகை உட்பட 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

அருகிலிருந்த மற்றொரு கடையின் ஓட்டைக் கழற்றிய போதும், அங்கு பொருள்கள் இல்லாததால் அப்படியே விட்டு விட்டுச் சென்று விட்டனர்.

நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றது.

அதே சமயம் இந்தத் திருட்டுச் சம்பவங்களை அடுத்து சுன்னாகம் வர்த்தக நிலையங்களுக்கு இரவுக் காவல் போடப்பட்டுள்ளது.

திங்கள் இரவு முதல் இந்தக் காவல் கடமை இடம்பெற்று வருவதாக வர்த்தக சங்கத்தினர் தெரிவிததனர்.

(இ-27)

# கணனிப் பயிற்சி கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். மத்திய கல்லூரியின் மகேஸ்வரி கணனிப் பயிற்சி நிலையம் இந்த ஆண்டுக்கான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அடிப்படைக் கணனிக் கற்கை மற்றும் இடைநிலைக் கணனிக் கற்கை என இரண்டு பிரிவுகளாகநடத்தப்படவிருக்கும் இந்தப்பயிற்சி நெறிக்கு முறையே. ஜி.சி.ஈ.சாதாரணதரப்பரீட்சையில்சித்தியடைந்தவர்களும், ஜி. சி. ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் எனத் — தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கற்கை நெறிகளுக்கான பாடத்திட்டங்களை வழங்கவும் பரீட்சைகளை நடத்தவும் தேசிய கல்வி நிறுவகம் முன்வந்துள்ளதாக மத்தியகல்லூரி அதிபர் அ. இராசதுரை தெரிவித்துள்ளார்.

மேற்படிகற்கைநெறிகளைத் தொடர விரும்பும் மாணவர்கள் இன்று புதன்கிழமைமுதல் கல்லூரி நேரத்தில் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியரும் எமது நண்பியுமான
சரவண்யா அவர்களின் அன்புத் தாயார்

## அமராவதி சிவபாதசுந்தரம்

அவர்கள் சிவபதம் எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

99 O/L (11D) நண்பிகள்
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(72812)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
திரு. தா. அருமைநாதன் அவர்களின்
அன்பு மாமனார்

## நாகமுத்து சின்னத்தம்பி


(கோவில் கட்டுத் தோட்டக் கணக்கர் — பளை)

அவர்கள் சிவபதமெய்தியதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளரும்
உத்தியோகத்தர்களும்.
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

(சி/10687)

# ஓராண்டு நினைவலைகள்



பெருவாழ்வு தந்த

## அமரர் சுவாம்பிள்ளை அருளானந்தம்

மண்ணில் 12—10—1926
விண்ணில் 19—01—1999

"நீரே என் ஆண்டவர் உம்மையன்றி எனக்கு வேறு நன்மையில்லை" [சங். 15:26]

*ஆறாக்கண்ணீரை விட்டாலும் – உந்தன்*
*அருளுக்கு என்றுமே நாம் அடிமை!*
*பேறாகக் கருதிய எமக்கெல்லாம் – நீங்கள்*
*பெருவாழ்வு தந்த தெய்வமையா!*
*தேராக நீர் வந்த வீதியெல்லாம் – உம்மைத்*
*தித்திக்க அழைக்குதையா!*
*ஓராண்டு நிறைவான வேளையில் – இன்று*
*ஒன்றாகக் கலந்திருக்க வாருமையா!*

அன்புத் தெய்வமே! இறைவா!! நீர் உம்முடன் அழைத்துக்கொண்ட எமது பாசமிகு தந்தையை உமது பேரின்ப மகிமையில் சேர்த்தருள்வீராக! ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்கான இரங்கல் திருப்பலி இன்று (19-01-2000) புதன்கிழமை பகல் 11.30 மணிக்கு உடுவில் புனித செபமாலை மாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

இல. 8, ஆக்லேன்,
உடுவில்.

[72807]


# மங்களகரமான திறப்பு விழா



## நியூரோன்
## தொலைத் தொடர்பகம்
**Newtone Telecommunication**

இல, 311 கண்டி வீதி, மீசாலை.

19-01-2000 காலை 9.00 மணி முதல்
10.00 மணிவரையுள்ள சுப வேளையில்
மேற்படி ஸ்தாபனத்தை ஆரம்பிக்க
திருவருள் கைகூடியுள்ளது.

தொலைபேசி இல.
உள்ளூர் 070-212901
வெளியூர் 009470-212901
24 மணி நேர சேவை



உள்வரும் அழைப்புக்கள் யாவும் உடனுக்குடன் அறிவிக்கப்படும்.
தங்குமிட வசதியுண்டு.

**நியூரோன் தொலைத் தொடர்பகம்**
311, கண்டி வீதி, மீசாலை. (சி/10670)

# 'மோட்டோறோலா' தொலைபேசி மேலும் 700 பேருக்குக் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 19
குடாநாட்டில் 'மோட்டோறோலா' தொலைபேசி வசதி மேலும் 700 பேருக்கு வழங்கப்படவிருக்கின்றது.

இத்தச் சேவையைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்குப் படிப்படியாக இணைப்பு வழங்கப்பட்டுவருவதாகவும்—

இணைப்புக்களை வழங்குவதற்காக கருவிகள் எடுத்து வரப்பட்டுள்ளபோதும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக விரைவாக இணைப்புக்களை வழங்க முடியாதுள்ளது என்றும்—

ரெலிக்கொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை 700 பேருக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 300 பேர் இணைப்பைப் பெறுவதற்காகப் பணம் செலுத்தியுள்ளனர் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்று

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலைக்கான புதிய கட்டடத் திறப்புவிழா இன்று காலை 9-35 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார். விசேட விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கமும் கலந்துகொள்வார். (ஐ-10)

* * *

அரியாலை, ஜன. 19
யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோ. கூ. சங்கங்களின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர்களுக்கான மாதாந்த மாநாடு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். கூட்டுறவுத் திணைக்கள மண்டபத்தில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முநாதன் தலைமையில் நடைபெறும். (ஐ-17)

* * *

யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் தரம் 1இற்கான கால்கோள் விழாவும் செயற்பாட்டறைத் திறப்பு விழாவும் இன்று புதன் காலை 9 மணிக்கு அதிபர் து. நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக இளைப்பாறிய முன்னாள் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களான திரு திருமதி எஸ். சிவரத்தினம் தம்பதிகள் கலந்துகொள்கின்றனர்.

அத்துடன் தரம் 1 சிறார்களை வரவேற்கும் கலை நிகழ்வுகளும் செயற்பாட்டறைகளின் புகுமுகவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-10)

## சமய சந்நிதிகளில்

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரிஅம்மன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சங்காபிஷேகம் இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு சாயரட்சைப் பூசையும் 4-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருதலும் நடைபெறவுள்ளன. (க)

* * *

உரும்பிராய் சிதம்பரசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த தேர் உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 8-00 மணிக்கும் நடைபெற்று மறுநாள் காலை 9-00 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (க-139)

* * *

புலோலி தெற்கு ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய மணவாளக் கோல விழா இன்று வியாழக்கிழமை பகல் நடைபெறும். (க-104)

* * *

ஏழாலை தெற்கு களபாவோடை (வசந்தபுரம்) ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 11.30 மணிக்கும் நாளை வியாழக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (க-30)

## அதிகாரி விஜயம்

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரியும் சட்டத்தரணியுமான என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்புமுகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் கைதிகளிடம் கையளிப்பார். (ஐ-10)

## சங்கானை, சுன்னாகம் ஊடாக சாவகச்சேரிக்குப் பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 19
சங்கானை, சுன்னாகம் ஊடாக சாவகச்சேரி வரையிலான பஸ்சேவை மீண்டும் இந்த மாத முற்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சங்கானை ஸ்ரீ பாரதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இச்சேவையின் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வே. சோ. சொக்கலிங்கமும் கௌரவ விருந்தினராக செயலாற்று முகாமையாளர் சு. மணிவாசகனும் கலந்து கொண்டு சேவையை ஆரம்பித்து வைத்தனர். (இ-15)

## கைது

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் திங்களன்று கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மயில்வாகனம் ரகுபாலரமணன் (வயது 23) என்ற இளைஞரே ஆவரங்காலில் வைத்துக் கைது செய்யப்பட்டவராவார் இவரது கைது தொடர்பாக ரசீதும் வழங்கப்பட்டுள்ளது (ஐ-10)

## மாவிட்டபுரத்தில் தைப்பூசத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 19
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவியில் இம்முறையும் தைப்பூசத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை ஏழு மணியிலிருந்து திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

ஸ்நபனாபிஷேகம் விசேட அபிஷேக பூசை ஆராதனைகள், மஞ்சஊர்திப் பவனி, சாந்திப்பிராத்தனை ஆகியன சிறப்பாக நடைபெற்று மகேஸ்வர பூசையும் இடம் பெறும்.

தைப்பூசத் திருவிழாவில் கலந்து கொள்ளும் அடியார்களின் வசதி கருதி மல்லாகத்திலிருந்து விசேட வான் சேவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் தெரிவித்தார் சென்ற வருடத்தைவிட ஏராளமான பக்தர்கள் இம்முறை மாவைக் கந்தனைத் தரிசிக்க வருவார்கள் என எதிர்பார்ப்பதால் தனியார் வான் சேவைக்கு ஒழுங்காகியுள்ளதாகவும் அவர் சொன்னார். (அ)


## தேவை

### BILL CLERK, BOOK KEEPER

ஹாட்வெயர் / மின் பொருள்கள் விற்பனையில் அனுபவமுள்ள A/L இல் சித்திபெய்திய 30-45 வயதுக்குட்பட்ட Bill Clerkக்கும் அனுபவமுள்ள Book-Keeperரும் தேவை.

29-1-2000க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர் இல. 990
மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.
(72821)

## யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை பால் காய்ச்சும் வைபவம்

வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கூட்டுறவுச்சபை பணிமனையின் பால் காய்ச்சும் வைபவம் 20—01—2000 வியாழக்கிழமை 10-30 மணிக்கு நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் அவர்களும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களும் மற்றும் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் அனைத்து கூட்டுறவாளர்களையும், கூட்டுறவுப் பணியாளர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை தலைவர்,
பணிப்பாளர்சபை உறுப்பினர்கள்,
செயலாளர், பணியாளர்கள்.
(சி/10695)

## கோப்பாய் பிரதேச செயலக திறப்பு விழா பாராட்டுதலும் நன்றி நவிலலும்

பல சிரமங்களின் மத்தியில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக புதிய கட்டடத்தை பொது மக்களின் பேராதரவுடன் அழகிய தோற்றத்துடன் அமைத்து திறப்பு விழாக் காணும் இன்றைய தினத்தில் அதனை நிறைவு செய்ய பெருமுயற்சியெடுத்து உதவிய யாழ்ப்பாணம் அரச அதிபர் க. சண்முகநாதன், கோப்பாய் பிரதேச செயலர் திரு க. கேதீஸ்வரன். பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் காணி வாங்குவதற்கு நிதி உதவி செய்த பொதுமக்கள் அனைவருக்கும் எமது மகிழ்ச்சிகரமான பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிராம முன்னேற்றச் சங்கம்,
அந்திய கால சேவைச் சங்கம்,
சமூக சேவா சங்கம்.

கோப்பாய் வடக்கு
18/01/2000.
(72831)

## ஒப்பந்த அடிப்படையில் எழுதுநர் தேவை

தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சியுள்ள எழுதுநர் தேவை. சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். சிங்கள மொழி தேர்ச்சி உள்ளவர்களுக்கும், ஆங்கிலம் தட்டச்சு செய்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 24-01-2000 திகதிக்கு முன்னதாக மாவட்டச்செயலாளர், யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை, இல. 14, மணிக்கூட்டு வீதி, என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

மாவட்டச் செயலாளர்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை
(சி/10699)

## பொதுக் கூட்டம்

இடம்: புதிய உயர் கலைக் கல்லூரி (ஆரியகுளம் சந்தி)
காலம்: 20-01-2000 வியாழக்கிழமை
நேரம்: மு. ப. 10.30 மணி (புதிய நேரம்)

இதுவரை வேலை கிடைக்காத 96, 97, 98, 99 ஆம் ஆண்டுக்குரிய பட்டதாரிகள் அனைவரையும் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

T. சந்திரகாசன்
தலைவர்

யாழ். மாவட்ட
வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(72843)

## சிகரெட் வர்த்தகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

கடந்த காலங்களில் சிகரெட் வகைகள் போதிய அளவு விநியோகஸ்தர்கள் மூலம் விநியோகிக்கப்பட்ட போதிலும் பாவனையாளர்களுக்குச் சரியான விலையில் சிகரெட் வகைகள் விற்கப்படவில்லை, இதனைத் தவிர்க்குமுகமாகவும் கடைகளுக்கு சிகரெட் வகைகள் கொம்பனி விலையில் கிடைப்பதற்கும் தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளோம். இதுவரை சிகரெட் விநியோக அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாகத் தங்களது கடையின் பெயர், விலாசம், உரிமையாளர் பெயர், என்னவகை வியாபாரம் போன்ற விவரங்களை ஓர் A4 தாளில் எழுதி தங்கள் பிரிவு கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தும் கடிதத்துடன் கொண்டுவந்து சிகரெட் விநியோகஸ்தர்களான

முருகன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.
குகன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.
அல்லது
சிறீ விக்னேஸ்வரா, சாவகச்சேரி.

ஆகிய இடங்களில் ஒப்படைத்து தங்கள் சிகரெட் விநியோக அட்டையைப் பெற்றுக்கொள்ளவும்.

★ இந்த அறிவித்தலின் பின் சிகரெட் விநியோக அட்டை இல்லாமல் சிகரெட் விநியோகிக்கப்படமாட்டாது

என்பதையும் கருத்தில் கொள்ளவும். அத்துடன் யாழ். குடாநாட்டிலுள்ள சகல கடைகளுக்கும் இந்த அறிவித்தல் பொருந்தும்.

- வடபகுதி விற்பனைப் பிரதிநிதி

(72839)

## அறக்கொடை வழங்கல்

தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்தம் சுவாமிகளின் 40ஆவது விதேகமுத்தி தின ஞாபகார்த்த அறக்கொடை வழங்கலும் பிரார்த்தனையும் நாளை காலை 9 மணிக்கு கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வு ஆச்சிரமத்தின் தலைவர் இ.குழந்தைவடிவேலு தலைமையில் நடைபெறும். (ஐ-3)

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச பிரதிநிதிகளையும் இவர் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றார்.

இங்கு நடத்தும் பேச்சுக்கள் மூலம் பெறப்படும் விடயங்களை உள்ளடக்கியதான அறிக்கை ஒன்றை இவர் பிரிட்டிஷ் அரச உயர் மட்டத்துக்கு கையளிப்பார்.

பிரிட்டிஷ் நிதிஅமைச்சர் கோர்டன் பிரவுண் ஆயுதக் கொள்வனவுக்காக இலங்கைக்கு வழங்கிவரும் 'ஏற்றுமதிக்கடன்' சலுகைக்கு கடந்த வாரம் தடைவிதித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் உயர் அதிகாரி ஒருவர் விஜயம் மேற்கொண்டிருப்பது குறிப்பாக நோக்கப்பட வேண்டியுள்ளது என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (ஐ-3)

## தனியார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தனியார் பஸ் சென்ற வேளையில் மோதல் சம்பவங்கள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை என்றும், திடீரென பஸ்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

பலியானவர் திருகோணமலையைச்சேர்ந்த புஸ்பமலர் (வயது 39) என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்தோரின் விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ)

## களுவாஞ்சிக்குடி...

((முதலாம் பக்கம் பார்க்க)

டைக்கல்லாறு), கே.ராகினிதேவி (வயது40 - கல்லாறு), வி.புவனேந்திரன் (வயது30 - களுவாஞ்சிக்குடி), சி.கணபதிப்பிள்ளை(வயது59 - எருவில்), எம்.தெய்வநாயகம்(வயது55- குருமன்வெளி) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இச்சம்பவத்தையடுத்து களுவாஞ்சிக்குடி நகரில் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டு நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. போக்குவரத்துக்களும் சிலமணிநேரம் ஸ்தம்பிதம் அடைந்தன. (ஐ)

## தொண்டாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமணியை நியமிக்க முடிவு எடுக்கப்பட்டது. புத்திரசிகாமணியை தற்சமயம் தேசியப்பட்டியல் வெற்றிடத்துக்கு நியமிப்பது என்றும் -அடுத்த தேர்தலில் பெறப்படும் தேசியப்பட்டியல் இடத்துக்கு எம்.எஸ்.செல்லச்சாமியை நியமிப்பது என்றும் - இணக்கம் காணப்பட்டுள்ளது.

## செஞ். அதிகாரி வன்னி விஜயம்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான பிரிவின் வதிவிடப் பிரதிநிதி ஜோன்ரென் கெனோ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கடந்த சனியன்று புலிகளின் கட்டுபாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்கு சென்றுள்ளார்.

வன்னியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிகளை அவர் அங்கு பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-164)


வீடியோ C.D
வெளியீடு
●ரம்பாஊர்வசி மேனகா
●திருநெல்வேலி
விஷ்னு வீடியோ,
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
C/10702

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.
A/L 99 DAY (PAPER CLASS)
அசேதன இரசாயனம்
ஆரம்பம் - 20.01.2000 வியாழன் 2.30
A/L 2000
பௌதீக இரசாயனம்
20.01.2000 வியாழன் 3.30
திரு.N.மகேஸ்வரன் (72802)

இன்று ஆரம்பம்
பங்குடமை
A/L 2000
DAY CLASS
காலை 10மணி (ப.நே.)
கணக்கீடு
D.SAM
D.M.I.
யாழ்நகர்.
(C/10689)


### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

**முழுநிலா நாள் கருத்தரங்கு**

இடம் :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம் :- 20.01.2000 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)

தலைமை :- திரு.க.சி.குகதாசன் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.)

"இலங்கையின் பங்குச் சந்தை அமைப்பும் அதன் தொழிற்பாடும்"

கருத்துரை வழங்குபவர் :- சிரேஷ்ட விரிவுரையாளர் வீ.பி.சிவநாதன் (தலைவர், பொருளியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

அனைவரும் வருக!

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

ஆதரவு :-
ஜெசிபா ஏஜென்ஸி
132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 2407 பக்ஸ் :- 2140
(C/10704)


சிவநெறி கல்வி நிலையம்
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)
2000 ஆம் ஆண்டுக்கான
புதிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| கணிதம்:- | பா. கிருபாகரன், றெஜினா. |
| விஞ்ஞானம் :- | ஐ. தயாபரன், யோ. சசிகுமார். |
| சமூகக்கல்வி :- | K. கந்தசாமி, S. அகிலன். |
| தமிழ் :- | K. திருச்செல்வம், கு. சுதாகரன். |
| ஆங்கிலம் :- | K. இரவீந்திரன், M. அருங்கரன். |
| வர்த்தகம் :- | S. மகேஸ்வரன். |
| தரம் 3, 4:- | M. மீரா. |
| புலமைப்பரிசில் விசேட வகுப்பு :- | பா. கிருபாகரன். |

தை மாதப் பரீட்சை - 20.01.2000
(C/10681) ~ நிர்வாகி ~

இன்ஸ்டிடியூட் ஒவ் இன்போமடிக்ஸ் ஸ்டடீஸ் (IIS)


### புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சை தொடர்பான முக்கிய அறிவித்தல்

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த மாணவர்கள் அனைவருக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 18.01.2000 வரை (செவ்வாய்க்கிழமை) அனுமதி அட்டைகளைக்கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் உடனடியாக தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

** நாட்டு நிலைமை காரணமாக சொந்த இடங்களில் இருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்திருக்கும் மாணவர்கள் தமது சொந்த இடங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் தோற்றமுடியாதிருப்பின் உங்களுக்கான விசேட பரீட்சை நிலையங்கள், யாழ்ப்பாண IIS தலைமைஅலுவலகத்திலும், நெல்லியடி கிளை அலுவலகத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பரீட்சை தினத்தன்று நேரடியாக அங்கு சமுகமளிக்கவும்.

இயக்குனர்,
IIS.

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/10676)


புத்தாயிரமாம் ஆண்டின் தொடக்கவேளையில்....
மருத்துவ மாணவர்கள் வழங்கும்
குழந்தை ம.சண்முகலிங்கத்தின்
வேள்வித் தீ
நாடகம்
கைலாசபதி கலையரங்கில்
இரண்டு காட்சிகள்
23.01.2000
ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 10.30
பி.ப. 3.30
குறிப்பு:-
பழைய நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டவர்கள் பின் வரும் ஒழுங்கில் அவற்றைப் பயன்படுத்தலாம்.
18.12.99 பி.ப. 3.30, 19.12.99 மு.ப. 10.30 நிகழ்வுகளுக்குரியவற்றை 2000.01.23 மு.ப. 10.30க்கும் 19.12.99 பி.ப. 3.30க்குரியவற்றை 2000.01.23 பி.ப. 3.30க்கும்.
புதிய நுழைவுச்சீட்டுக்களும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.
(72809) M.S.U.

SUBRA
சித்தன்கேணி.
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க...
யாழ். விரிவுரையாளர்களின் ஆதரவுடன்
G.A.Q
1ST IN COM.
(யாழ். போதனை)
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
20.01.2000
வியாழக்கிழமை
காலை 8.00 மணி (ப.நே.)
* அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(72796)

ஷண்ணின் வீடியோ C.D வெளியீடு
பிரபுவின் வித்தியாசமான நடிப்பில்
திருநெல்வேலி
திரையரங்க அரங்கத்தவர்களுக்கு முன்னுரிமை.
கண்ணுக்குள் நிலவு,
குட்லக் போஸ்ரர்கள் விற்பனைக்கு.
டின் றெக்கோடிங் ஸ்பொட்
(72851) யாழ்நகர்.

இன்றைய ஓடியோ C.D வெளியீடுகள்
❖திருநெல்வேலி
❖மனமே என் மனமே
❖அடி ஆத்தி
❖சூராங்கன்னி
மூர்த்தி வீடியோ சென்ரர்,
மானிப்பாய்.
(C/10701)


### வலி. கிழக்கு பெருமக்களுக்கு

தங்களின் பங்களிப்புடன் கொள்வனவு செய்யப்பெற்ற காணியில் அமைக்கப்பட்ட பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடத்தில் இன்று காலை 9.00 - 10.00 மணிக்கிடையில் வரும் சுபவேளையில் வைபவ ரீதியாகக் கடமைகளை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம்.

இச்சந்தர்ப்பத்தில் இந்த செயலகம் உருவாவதற்குக் காரணமாயிருந்த சகலருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எவ்வாறாயினும் இதுவரை இந்த பிரதேச மக்களுக்காக ஆற்றிய சேவைகளை மேலும் சிறப்பாக இச் செயலகத்தினூடாக ஆற்றுவேனென உறுதியளிக்கின்றேன்.

பிரதேச செயலகம்,
வலி.கிழக்கு. (C/10674)

க.கேதீஸ்வரன்,
பிரதேச செயலர்.

### வாழ்த்துகிறோம்

நாடாளுமன்ற உறுப்பினராக நேற்றுப் பதவியேற்றுள்ள வேலும் மயிலும் குகேந்திரனை (ஜெகன்) எமது வட்டுக்கோட்டைப்பிரதேச மக்களும் வலிமேற்குப் பிரதேச சபையினரும் வாழ்த்துகின்றனர்.

எமது தொகுதியின் அபிவிருத்தியை முன்னெடுக்க தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்கவேண்டும் என்று கோருகிறோம்.

ந.திரிலோகநாதன்
வலிமேற்கு பிரதேசசபைத் தலைவரும்,
ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டை அமைப்பாளரும்.
(C/10700)


விற்பனைக்கு
மிற்சுயி சீமெந்து வந்துவிட்டது
உடன் ஓடர்களைப் பதிவு செய்யவும்
ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
(C/10703) யாழ்ப்பாணம். T.P- 2407


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் இராஜேஸ்வரன்

வதிரி, கண்ணன் இல்லத்தைச் சேர்ந்த வல்லிபுரம் இராஜேஸ்வரன் அவர்கள் நேற்று (18-01-2000) காலமாகிவிட்டார்.

அன்னார் பிரபாவதியின் அன்புக் கணவரும் இராஜேஸ்கண்ணன் (யாழ்.பல்கலைக்கழகம் - கலைப்பிரிவு இறுதி ஆண்டு மாணவன்), பிரவேஸ்கண்ணன் (யாழ்.பல்கலைக்கழகம் - வர்த்தகப்பிரிவு முதலாம் ஆண்டு மாணவன்), குந்தவை, வைஷ்ணவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணன் இல்லம்,
வதிரி.

தகவல்:-
ந.பேரானந்தன்,
(மைத்துனர்.)
(C/10705)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.